# பாரத மணி

ாடர் முத்து 86 | வாரப் பத்திரிகை | 11-8-

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

★

மைசூர் மஹாராஜா

போகிற போக்கில்

பணிவும் பருமனும்

சுகாதார நலன்கள்

★

THE BHARATA MANI, MADRAS.
EDITOR : K.S. VENKATA RAMANI.

## வலங்கிமான் டி. மு. கோர்ட்

I. A. 497 of 1940 in O. S. 190 of 1937

அப்துல் காதர் ராவுத்தர்—வாதி—மனுதார்.

1. அ. மீ. அபுபக்கர் ராவுத்தர்
2. அப்துல் வகாப் ராவுத்தர்
5. ரகிமான் பீவி அம்மாள்
6. குப்பாபக்கிரி ராவுத்தர்
7. ஜைத்தூன் பீவி
8. மைனர் ஹபி முகமது
9. மைனர் எக்ஷா பீவி
10. ரகிமான் பீவி

} 1-2-5 முதல் 10 பிரதிவாதிகள் எதிர் மனுதார்கள்

ஷை 8, 9 மைனர்களுக்கு 10-ம் பிரதிவாதி —கார்டியன்.

ஷை வாதி தெரிவித்துக் கொள்ளுகிறதாவது:—

ஷை நம்பரில் 29-8-1938உ ஏற்பட்ட பிரிலிமினெரி டிகிரியை, பைனல் டிக்கிரி செய்யவேணுமென்று வாதி மனுக்கொடுத்து 23-8-1940உ ஈறங்கி கெடு குறிக்கப்பட்டிருக்கிறது. அதுவிஷயமாய் உள்ள ஆக்ஷேபனைகளை ஷை பிரதிவாதிகள் ஷை தினம் முறபகல் 10-மணிக்கு ஷை கோர்ட்டார் முன்பு நேரிலோ வக்கீல் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் ஒருதலை பக்ஷமாய் முடிவுசெய்யப்படுமென்பதை அரியவும்.

N. தியாகராஜன், B.A., B.L.

6-8-1940. வாதி வக்கீல்.

## வலங்கிமான் டி. மு. கோர்ட்

S. C. No. 334/1940.

கும்பகோணம் தாலூக்கா திப்பகுளபுரத்திலிருக்கும் ராமப்பா அய்யர் குமாரர் N. R. நாராயணசாமி அய்யர்—வாதி.

தஞ்சாவூர் தாலூக்கா நடுக்காவேரியிலிருக்கும் ராமச்சந்திர அய்யர் குமாரர் R. வெங்கட்டராம அய்யர்—பிரதிவாதி.

ஷை நம்பர் வாதி வக்கீல் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது:—

ஷை நம்பர் வாதிக்கு பிரதிவாதியால் 4-4-1937ல் ரூ. 75-க்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற பிராமிசரி நோட்டின்படி தொகை ரூ. 100 கிடைக்க மேலேகண்ட நம்பரில் தாவா செய்து பிரதிவாதிக்கு பல தடவைகளிலும் சம்மன் போய் சர்வாகாததினால் ஒட்டி சர்வு செய்யவும், Publication க்கும் உத்திரவாகி 31-8-40ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிற விபரம் அறியவும். அதுவிஷயமாய் ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை ஈரங்கியன்றையதினம் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். அப்படி இல்லாதவரையில் எக்ஸ்பார்ட்டி டிக்ரி செய்யப்படும் என்பதை அறியவும்.

S. Subramania Sastrigal,

5-8-40. *Pleader for Plaintiff.*

## வலங்கிமான் டி. மு. கோர்ட்

O. S. No. 233 of 1933

பரிபூரணத்தம்மாள்—வாதி

வேணுகோபால பிள்ளை—பிரதிவாதி

ஷை பிரதிவாதிக்கு

ஷை நம்பரில் ஜெப்தியான சொத்துக்களை எலம் போடவும் இஸ்த்தியார் ஷாத்திக்களை நிஷ்காரிஷிகாவும் வாதி எலம் எடுக்க அனுமதிக்காகவும் வாதியால் மனு கொடுக்கப்பட்டு பிரதிவாதிக்கு நோட்டீஸ் போய் ஸர்வாகாததால் ஒட்டி ஸர்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாய் நாளது 26-8-40உ யில் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது.

S. Sampath Iyengar,
வாதி வக்கீல்.
காமாக்ஷி ஜோஸ்யர் தெரு,

8-8-40. கும்பகோணம்.

### நோட்டீஸ்

## மன்னார்குடி டி. முன்சீப் கோர்ட்

O. S. No. 572 of 1936.

E. A. No. 187 of 1940.

C. R. சாரங்கபாணியய்யங்கார்-வாதி & மனுதார்

(1) கும்பகோணம் டி. மு. இலாகா, பௌண்டரீகபுரத்திலிருக்கும் ஒழுகுசேரி, ராமஸாமியய்யங்கார் குமாரர் T. R. சீனிவாச ராஜகோபாலய்யங்கார்.

(2) ஷை இடத்திலிருக்கும் ஷை முதல் பிரதிவாதியின் அவிபக்த குமாரர் R. S. திருவேங்கடத்தய்யங்கார்.

} பிரதிவாதிகள் & எதிர் மனுதார்கள்

ஷை நெம்பரில் பிரதிவாதிகட்கு தெரிவிப்பது யாதெனில்:—

ஷை நெம்பரில், டிக்கிரி தொகை வகையறாவை, மதராஸ் A. R. act IV of 38 Sec. 19-ன்படி Scale down செய்து Fresh decree pass செய்யவேணுமாய் ஷை மனுதார் வாதியால் மனு கொடுத்து நோட்டீசுக்கு உத்திரவாகி சர்வாகாததால், ஒட்டி சர்வு செய்யவும், பப்ளிகேஷனுக்கும் ஆர்டராகி நாளது 13-8-40 தேதிக்கு ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையிருந்தால் ஷை தேதியில் கோர்ட்டில் பகல் 10-மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம், இத் விபரம் அறியவும்.

மன்னார்குடி, } V. K. Rajagopala
30-7-40. } Ayyangar,
*Pleader for Pltf. & Petnr.*

# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 4
வெளிநாடு ரூ. 6

| மாலை 4 | ஞாயிறு 11-8-40 விக்ரமஹு ஆடிமீ 27உ | முத்து 13 |
|---|---|---|

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உலக வர்த்தமானம் ... ... ... ... | | 346 |
| வைசிராயின் அறிக்கை ... ... ... ... | | 348 |
| போகிற போக்கில் ... ... ... ... | | 349 |
| காலஞ்சென்ற மைசூர் மஹாராஜா ... ... ... | | 351 |
| மன்ரோ கொள்கை ... ... ... ... | | 352 |
| பணிவும் பருமனும் ... | டாக்டர் கே. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் | 354 |
| சுகாதார நலன்கள் ... ... | டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி | 356 |
| இலக்கியம் ... ... ... ... | கீ. ரா. | 360 |
| விதியின் எழுத்து ... ... ... | கி. ஸ்ரீ. வெங்கடேசன் | 362 |
| பாழடைந்த பங்களா ... ... ... | ஆர். கே. தியாகராஜன் | 364 |
| சிறுவர் பகுதி ... ... ... | எஸ். சீதாராமன் | 367 |


---

" பாரத மணி " யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# உலக வர்த்தமானம்

ஐரோப்பாவில் யுத்தம் வலுத்துக் கொண்டே வருகிறது. ஜெர்மன் விமானங்கள் தினம் நாற்பது ஐம்பது இங்கிலாந்துக்குச் செல்லுகின்றனவாம். ஆனால் திரும்ப ஜெர்மனிக்கு வருவது சில விமானங்கள் தான் என்று செய்தி கூறுகின்றது. திடீரென்று, நார்வே மீது படை எடுத்தது போல் ஹிட்லர் 'மின்னல்' யுத்தத்தை நடத்துவார் என்று பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் பிரிட்டன் நாஜி விமானங்களை எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டிய சாதனங்களைச் சம்பாதித்து வைத்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறது. பிரிட்டனில் ஒவ்வொருவனும் தன் சுயநலத்தைக் கருதாது தேசத்தின் க்ஷேமத்துக்குப் பாடுபடுகிறான். இதனால் ஒவ்வொருநாளும் மூட்டை மூட்டையாகப் பணம் கேட்கும் இந்த யுத்தத்தைப் பிரிட்டன் நடத்த முடிகிறது. அமெரிக்காவும் தன் விமான உற்பத்தியை மஹத்தான செலவில் அதிகரித்துப் பிரிட்டனுக்கு உதவ முன் வந்திருக்கிறது.

பிரான்ஸில் பாஸிஸ்டு சர்க்காரைப் போல் மார்ஷல் பெட்டேய்னின் சர்க்கார் அமைக்கப்பட்டிருக்கிறது. மார்ஷல் பெட்டேயன் இப்பொழுது பிரான்ஸின் சர்வாதிகாரியாக விளங்குகின்றார். ஆனால், பிரான்ஸின் புதிய சர்க்காரைப் பற்றி பொதுஜன அபிப்பிராயம்மாத்திரம் திருப்திகரமாக இல்லை. "சுதந்திரத்தை நிலைநாட்டிய பிரான்ஸிற்குக் கூடவா இந்த கதி" என்று எல்லோரும் வருத்தப் படுகிறார்கள்.

சந்தில் சிந்து பாடி விட்டது ரஷ்யா. எஸ்த்வேனியா, லாட்வியா முதலிய சிறு நாடுகள் ரஷ்யாவில் சேர்ந்து விட்டனவாம். அது தன்னுடைய நிர்ப்பந்தத்தினால் அல்ல என்று கூறுகிறார் ஸ்டாலின். அதோடு நிற்கவில்லை. ஜெர்மனி—ரஷ்யா நேசப் பான்மையை ஊர்ஜிதம் செய்தார். பிரிட்டிஷாருடன் அவர் வெகுநாட்களுக்கு முன்னமேயே 'கா' விட்டுவிட்டாராம். 'கா' பழமாக ஸ்டாப்போர்ட்டு க்ரிப்ஸ் வந்தாலும் சரி, யார் வந்தாலும் சரி முடியாது, என்று கூறினார். இவ்வளவையும் கூறிவிட்டுகூட ரஷ்யா இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் நடு நிலைமையை வகிக்கும் என்றும் கூறிவிட்டார்.

இத்தாலிக்குத் திடீரென்று என்ன தோன்றிற்றோ என்னவோ, ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் சோமாலி லாந்தின் மீது படை எடுத்து விட்டது. இப்பொழுது அங்கு கோரமான யுத்தம் நடந்துவருகிறது என்று தெரிகிறது. நான்கு ஐந்து தினங்களில் இரண்டு மூன்று நகரங்களைப் பிடித்து விட்டதாம். ஆனால் எதிர்ப்பும் வெகு தீவிரமாக இருக்கிறது என்று செய்திகள் கூறுகின்றன.

ஜப்பான் காலத்தை யறிந்து நடக்கிறது. போகுந் தூரம் பிரிட்டிஷாரை மிரட்டுகிறது. கிழக்கு ஆசியாவில் ஓர் புதிய அரசியலை நிலைநாட்ட வேண்டும் என்று பாடுபடுகிறது. கிழக்கு இந்தியத் தீவுகள் இந்தோ சைனா முதலிய பிரதேசங்களில் தான் கை வைக்க வேண்டுமாம். இதனிடையில் ஒன்பது பிரிட்டிஷ்காரர்களைச் சிறையிலிட்டது. பிரிட்டனும் ஜப்பானை இப்பொழுது எதிரிட்டுக் கொள்வது பிசகு என்று பர்மாரஸ்தாவை மூடிற்று. ஆனால் பிரிட்டிஷார்களை ஜப்பான் கைது செய்தது பற்றிப் பிரிட்டன் ஜப்பானைக் கண்டிக்கிறது. இங்கிலாந்தி

லிருந்த சில ஜப்பானியர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று தெரிகிறது. ஆனால் இது 'எட்டிக்குப் போட்டி'யாகச் செய்ததல்ல என்று பிரிட்டன் கூறுகிறது. தேசப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவர்களைக் கைது செய்திருப்பதாகப் பிரிட்டன் கூறுகிறது.

## இந்தியாவில்

இவ் வாரத்தில் இந்தியாவுக்கே ஓர் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. குணசாலியும், ஜனங்களிடத்தில் அன்பு பாராட்டுகிறவரும், சர்க்கார் நிர்வாகத்தில் நிபுணருமான மைசூர் மஹாராஜா ஸ்ரீ. கிருஷ்ணராஜேந்திர உடையார் பகதூர் மறைந்தார். "மைசூர் மஹாராஜாவின் மறைவு மைசூருக்கு மாத்திரமல்ல, இந்தியா பூராவுக்குமே ஓர் பெருத்த நஷ்டத்தை யுண்டுபண்ணி இருக்கிறது" என்று சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கூறினர்.

சென்ற வாரத்தில் பூனாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸின் சரித்திரத்தில் ஒரு முக்கிய ஸ்தானம்வகிக்கக்கூடியதான இரண்டுதீர்மானங்களை நிறைவேற்றிற்று. சென்னை மாகாண மாஜி பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரியே அவற்றைப் பிரேரேபித்தார். ஒரு தீர்மானம் உடனே இந்தியாவுக்குச் 'சுதந்திரத்தை' யளித்து மத்திய சர்க்காரைப் பொறுப்புள்ளதாகச் செய்ய வேண்டும் என்று பிரிட்டிஷாரைக் கோருகிறது. மற்றொன்று, தேசம் தற்சமயம் பூர்ண அஹிம்ஸையை அனுஷ்டிக்கத் தயாராக இல்லாததால், தேசத்தின் நிர்வாகத்தை நடத்தும்போது உள் நாட்டு கலவரத்தையும், வெளிநாட்டுப் படையெடுப்பையும் எதிர்க்க சிறிதளவாவது பலாத்காரம் உபயோகிக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்தத் தீர்மானம் தான் காந்தீயத்தைக் கடைப் பிடிப்பவர்களுக்கு அதிருப்தி யளித்திருக்கிறது. இதனால் காந்திஜீ காங்கிரஸை விட்டு விட்டார் என்று சிலர் தீர்மானித்து விட்டார்கள். ஆனால் கூட்டத்துக்குப் பிறகு காந்திஜி விடுத்த அறிக்கையிலிருந்தும், ராஜாஜி சென்னையில் செய்த பிரசங்கத்திலிருந்தும், காந்திஜி காங்கிரஸை விட்டு விலகவில்லை என்று தெரிகிறது. காங்கிரஸை விட்டு விலகினால் காந்திஜி "நிலைமை நெருக்கடியானால் நான் காங்கிரஸைத் தலைமை வகித்துச் சுதந்திரப் போர் செய்யத் தயங்க மாட்டேன்" என்று எப்படிச் சொல்லுவார், என்று ராஜாஜி கேட்கிறார். "நாம் சுதந்திரத்தை அடைந்தே தீருவோம்" என்று சபதம் கூறினர்.

சென்ற வாரத்தில் வங்காளக் கவி தாகூருக்கு ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலை 'டாக்டர் அப் லெட்டர்ஸ்' என்ற கௌரவப் பட்டத்தை அளித்துக் கௌரவப்படுத்திற்று. பெடரல் கோர்ட் பிரதம நீதிபதி ஸர் மாரிஸ் குவயர் அதுசமயம் அக்கிராசனம் வகித்துப் பேசும்பொழுது "கவி தாகூர் ஆக்ஸ்போர்டின் கௌரவப் பட்டத்தை வகிக்கத் தகுந்த பூரண யோக்கியதை உள்ளவர். அவரைக் கௌரவப்படுத்தியதால் ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலையே கௌரவத்தை அடைந்தது" என்று கூறினர்.

வைஸ்ராய் இந்திய அரசியல் சம்பந்தமாக ஒரு முக்கியமான அறிக்கையை வெளி இட்டார். பிரிட்டிஷார், இந்தியாவின் தேசிய உணர்ச்சிப் பெருக்கையும் சுதந்திரப் பற்றையும் நன்குணர்ந்து இந்த யுத்தத்தின் முடிவில், இந்தியாவின் சில முக்கிய அரசியல் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து இந்தியாவுக்கு வேண்டிய அரசியல் திட்டத்தை ஏற்படுத்தச் சிரத்தை எடுத்துக்கொண் டிருக்கிறார்கள் என்று கூறினர். இப்பொழுது வைஸ்ராயின் நிர்வாக சபையில் சில முக்கிய அரசியல் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொண்டும், யுத்த அட்வைஸரி கமிட்டி ஒன்று அமைத்துக்கொண்டும் சர்க்காரை நடத்தத் தான் தயாராக இருப்பதாகக் கூறினர்.

வைஸ்ராயின் அறிக்கை பல விடங்களில் அதிருப்தி யளித்திருக்கிறது. ஆனல் காந்திஜி இதைப்பற்றி ஒன்றும் அபிப்பிராயம் கூறவில்லை.

# வைஸ்ராயின் அறிக்கை

[கா. சி. வேங்கடரமணி]

அவாவுடன் வெகுநாளாய் எதிர்பார்த்த வைஸ்ராயின் அறிக்கை வெளிவந்து விட்டது. அது ஏமாற்றத்தைத்தான் அளித்திருக்கிறது. இந்த அறிக்கை முக்கியமானது. ஏனென்றால் மன்னர் சர்க்காருடன் கலந்து இந்திய கவர்ன்மெண்டார் தீர்மானத்துக்கு வந்த அறிக்கை. இது பிரிட்டிஷ் மந்திரி சபையின் கடை வாக்கு.

வின்ஸ்டன் சர்ச்சில் பிரதம மந்திரியாயிருக்கும் மந்திரி சபையில்—லார்ட்டு ஹாலிபாக்ஸ் இருந்தாலும்—இந்தியா சம்பந்தப்பட்டவரையில் பழைய கொள்கைகளும், பழைய வழிகளும் ஆட்சிபெற்று வருகின்றன என்பதற்கு ஐயமில்லை. நமது நாட்டிலுள்ள உண்மையான உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் அறிந்தவர்கள் அவர்கள் அல்ல. இந்த மனப்பாங்கே இல்லை. இன்றையதினம் இந்தியா மந்திரி எல். எஸ். அமெரிதான் கொஞ்சகாலம் முந்தி சொன்ன வார்த்தையைப் பின் வாங்கிக் கொண்டபோதிலும் இந்தியா விஷயத்தில் தீவிரமான ஆலோசனை செய்யவில்லை என்றுதான் தோன்றுகிறது.

வைஸ்ராயின் அறிக்கையில் உள்ள குறைகள் பல. யுத்த முடிவின் பின் இந்தியாவுக்கு டொமினியன் பதவி வரும் காலத்தைத் தெளிவாய்க் குறிப்பிடவில்லை. அந்தப் பதவியை அடைய அரசியல் நிர்ணய சபையை நிர்மாணிக்கச் சுவாதீனத்தை முழுவதும் இந்தியாவின் கையில் ஒப்புவிக்கவில்லை. நமது நாட்டில் விழல் போல் மண்டி வரும் மைனாரிட்டிகளின் போக்கையும் கிளர்ச்சியையும் வைஸ்ராயின் அறிக்கை ஆமோதித்து ஆதரவளிக்கிறது. ஓர் புதிய மைனாரிட்டியையும் சிருஷ்டி செய்திருக்கிறது—அரசியல் மைனாரிட்டி. இதனால் வேற்றுமையும் பிளவுகளும் அதிகரிக்குமே யொழிய ஒற்றுமைக்கு அனுகுணங்கள் ஒருக்காலும் ஏற்படாது. மத்திய சர்க்காரின் அமைப்பையும் மாற்றவில்லை. சட்ட சபைக்கு வைஸ்ராயின் நிர்வாக சபையை உட்படுத்திப் பொறுப்பாக்கவில்லை. நிர்வாக சபையில் பிரதானமான அரசியல் வாதிகளில் சிலரைச் சேர்த்தால் போதுமா? சுண்ணாம்பை மண்ணோடு கலந்தால் சேருமா? சுவர் வலுக்குமா? மண்தான் மேலிட்டு நிற்கும்.

வைஸ்ராயின் அறிக்கை அரசியல் குழப்பத்தைக் கிண்டிவிடுமே யொழியத் தீர்க்காது. இந்திய அரசியல் விஷயத்தில் இந்த நெருக்கடியில் பிரிட்டிஷ் மந்திரி சபை தேவையான ஊக்கம் எடுத்துக் கொள்ளவில்லை. இந்தியாவின் உணர்ச்சியையும் தீவிரங்களையும் தெரிந்துகொள்ளவில்லை. தங்கள் கஷ்ட நிஷ்டூரங்களிலேயே ஈடுபட்டு மனம் தேங்கி நிற்கிறார்கள். இந்த தேக்கத்தையே தீர்த்துக் கொள்ள இந்தியாவின் மனமார்ந்த நட்பும் உதவியும் முக்கியம் என்பது தெரிந்து கொள்ளவில்லை. பிரிட்டிஷ் மந்திரி சபையில் கொஞ்ச காலமாய்த் தீர்க்கதரிசிகள் இல்லை. ரஷ்யாவின் உதவியை அலட்சியத்தாலும் தெரியாத்தனத்தாலும் இழந்ததுபோல் இந்தியாவின் உதவியையும் பிரிட்டன் இழக்கக்கூடாது என்பதுதான் என் கோரிக்கை. ஈசனுக்கு என் பிரார்த்தனை.

பிரிட்டிஷ் மந்திரி சபையும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் மாறிப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கே ஓர் புதிய ஐக்கிய மந்திரி சபை ஏற்பட்டால்தான் இப்பொழுது சுழன்று நிற்கும் இருட்டில் கொஞ்சம் நிலவு வெளிச்சமாவது கிடைக்கும்; குழப்பம் தீரும். அரசியலில் இந்த நெருக்கடியில்தான் தீர்க்கதரிசிகள் வேண்டும்.

வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு அஞ்சாத நெஞ்சம் உண்டு. சளைக்காத உழைப்பு உண்டு. கடுகு போகும் இடம் தெளிவாய்த் தெரியும். கண் முன்னால் பூசனிக்காய் உருண்டு போகும் வழி தெரியாது.




மூன்றுநாளாக என் முகாம் திரிசிராப்பள்ளி. நேற்றைய தினமே "இந்தோ சிலோன்" எக்ஸ்பிரஸில் புறப்பட்டு நான் பட்டணம் போயிருக்கவேண்டும். ஆனல் காவிரியின் ஓய்வற்ற அழகிலும், ஸ்ரீரங்கத்தின் கண்கொள்ளாச் சேவையிலும் செழிப்பிலும், உச்சிப் பிள்ளையார் கோவிலின் உன்னதப் பதவியின் ஒளியிலும், திருச்சி ரேடியோவின் ஆடல்பாடல் ஒலியிலும் ஆழ்ந்து மெய்ம்மறந்து திருச்சியிலேயே தங்கி விட்டேன்.

* * *

இரவில்கூட எனக்குத் தூக்கம் நன்ருகப் பிடிக்கவில்லை. இராத்திரி விருந்து பலம். பங்களாவில் காவல் காக்கும் வேட்டை நாய் என்னேடு உறவு கொண்டாடிக்கொண்டு திண்ணையில் என் அருகில் பெங்களூர் கம்பளியில் வாலைச் சுருட்டிக் கொண்டு 'கம கம'வென்று என்னேடுகூடச் சுகமாய்ப் படுத்துக் கொண்டு விட்டது. எனக்குப் புரளக்கூடப் பயமாயிருந்தது—வாலில் புரண்டால் துடையில் பிடுங்கிவிடுமோ என்று பயமிருந்தது—கூனூருக்குப் போகும் பாக்யம் இந்த நிலையில் இல்லாமலிருந்தால் போதும்!

சுமார் மணி ஐந்து இருக்கும். பொழுதுநன்ருய் விடியவில்லை. வேட்டை நாய், வீட்டு ஜமீன்தார்போலச் சுகமாய்த் தூங்கிக்கொண் டிருந்தது. நான் எழுந்து போவதைக்கூட அது கவனிக்கவில்லை --- இருப்பவருக்குக் கூட நாய் காவல் உண்டோ, வருவோருக்குத்தானே காவல்!

* * *

காலையில் ஆநந்தமாய்க் காவிரியில் சுழலுக்குள் சுழலாய் ஆழ்ந்து ஸ்நானம் செய்துவிட்டு, படிவாசற் பிள்ளையாரைத் தரிசனம் செய்து மலைவாசலை விட்டுச் சின்னக்கடைத் தெருக் குப்பையில் காலை வைத்தேன். என் பழைய நண்பர் ஒருவரை—கோபுவல்ல—எதிர்பாராமல் நான் கண்டேன். "என்ன மணி, சௌக்கியமா ? என்ன திருச்சிக்கு அபூர்வமா யிருக்கிறதே! எப்போது இவ்விடம் வந்தாய்? இவ்வளவு காலையில் ஸ்நானமும் ஸ்வாமி தரிசனமுமா ?" என்று வியப்புடன் கேட்டார். ஆமாம், அவர் வாயில் ஒரு கவுளி வெற்றிலையும் ஒரு கட்டுப் புகையிலையும் இருந்தது. இதை அடக்கி, வெற்றி பெற்று என்னை இந்தக் கேள்வி கேட்டார்.

ஆமாம், 'ஸர்வே ஜனு சுகினு பவந்து' என்று உச்சிப் பிள்ளையாரைப் பிரார்த்தித்துக் கொண்டேன். "நீ சௌக்கியமா ?"—என்று நண்பரைக் குசல ப்ரச்னம் செய்தேன். அவர் பெயர் கொஞ்சம் மறந்திருந்தது. ஆனல் அவர் இருபதுவருஷ

காலமாகத் திருச்சியில் டாக்டராயிருக்கிறார் என்பது நிச்சயம் தெரியும்.

"நான் சௌக்யம்தான்—ஆனால் மைசூர் மஹாராஜா காலம் சென்று விட்டார். நான் இன்று காலையில் காபி குடித்துக்கொண் டிருக்கும் பொழுது 'பி.பி.சி'யில் இந்த செய்தியைக் கேட்டேன்"—என்று சொல்லிவிட்டு விசனத்துடன் வெற்றிலையையும் புகையிலையையும் அடக்கி வாயில் ஒரு ஓரத்தில் கொண்டுவந்து சேர்த்துத் தயங்கி நின்றார்.

மைசூர் மஹாராஜா தமக்கே சொந்த 'க்ளயன்ட்'போல் மிக்க விசனித்தார். இதுவே மைசூர் மஹாராஜாவின் எங்கும் பரவி நிற்கும் நன்மதிப்புக்குச் சாட்சியாகும். 'க்ளயன்டா'யில்லாத பேர்வழி காலஞ் சென்றாலும் அதை விசனிக்கும் டாக்டர்கள் உண்டோ?

நானும் திடுக்கிட்டு இடியிடித்தாற்போல் நின்றேன். ஆசிரியர்களுக்கு மஹாராஜா வென்றாலே நாக்கில் கொஞ்சம் ஊறும்.

கொடுமையும் யுத்தமும் பாபமும் காட்டு வெள்ளம்போல் பெருகிவரும் கலிகாலத்தில், இந்த உலக நெருக்கடியில் மைசூர் மஹாராஜாவைப் போல் ராஜரிஷியாய் வாழ்ந்து செங்கோல் செலுத்திவந்த புண்ய புருஷர்களை நாம் இழப்பது எவ்வளவு துர்ப்பாக்கியம்!

இப்படிச் சிந்தனையில் நான் ஆழ்ந்து நிற்கும்பொழுது, திருச்சி சின்னக் கடைத் தெருக் காப்பிக் கிளப் குப்பையையெல்லாம் வாரிக் கொண்டுவந்த ஒரு சுழல் காற்று என்னையும் அதன் சுழலுக்குள் படுத்திவிட்டது.

மணி





வைடோ பெர்ரின்

TRADE ITL MARK

வைடமின் குறைவு, இரத்த மின்மை, பலஹீனம் முதலிய வற்றிற்கு

சிறந்த டானிக்

மிகவும் இனிமையானது. மால்ட் சத்தும், தேனும் சேர்த்துச் செய்யப் பட்டது. வைடமின்கள் ஏ, பி, டியும் அயமும் கொண்டது

கவர்ன்மெண்ட் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லெபாரடரி

மல்லேஸ்வாம் :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் பெஸ்ட் & கோ.,

த. பெ. 63 :: மதராஸ்

# காலஞ்சென்ற மைசூர் மஹாராஜா *

[கா. சி. வேங்கடரமணி]

மைசூர் மஹாராஜா ஸ்ரீகிருஷ்ணராஜேந்திர உடையார் பஹதூர் காலஞ்சென்றுவிட்டாரென்று நான் திருச்சியில் கேள்விப்பட்டவுடனே என் ஞாபகம் மைசூருக்குச் சென்றது. 1939-ம் வருஷம் ஜூன் மாதம் மஹாராஜாவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் மைசூரில் நான் கண்ட காட்சிகளெல்லாம் என் நினைவுக்கு வந்தன.

காலஞ்சென்ற மைசூர் மஹாராஜா ஸ்ரீ கிருஷ்ணராஜேந்திர உடையார் பஹதூர் 1884-ம் வருஷம் ஜூன் மாதம் 4-ந்தேதி பிறந்தார். பத்துப் பிராயத்தில் 1895-ம் வருஷம் பிப்ரவரிமீ முதல் தேதி சிம்மாசனம் ஏறினார். 1902-ம் வருஷம் ஜூன்மீ அவரது பதினெட்டாவது வயது ஜயந்தியின்போது பூரண ஆட்சிசெய்யும் அதிகாரம் கர்ஸன் பிரபுவால் அளிக்கப்பட்டார். சென்ற முப்பத்தெட்டு வருஷ காலமாய்க் களைப்பு சளைப்பில்லாமல் செங்கோல் செலுத்தி வந்தார்.

உண்மையில் காலஞ்சென்ற மைசூர் மஹாராஜா ஒரு ராஜரிஷிதான். பார்வைக்கும் சாந்த சொரூபர்.. உண்மையிலும் பரம சாந்தர். உள்ளும் புறமும் ஒத்து வாழ்ந்த சில பெரியோரில் இவரும் ஒருவர். அவரைக் கண்டுகளிக்காதவர் ஒருவருமில்லை. இராமேசுவரம் முதல் ரிஷிகேசம் வரையில், தோட்டி முதல் தொண்டைமான் வரையில் தங்கள் அன்பை அவரவர்கள் மஹாராஜாவுக்குக் கப்பமாகச் செலுத்தி வந்தார்கள்.

காலஞ்சென்ற மஹாராஜா எல்லாக் கலைகளிலும் பூர்ண ஞானம் பெற்றவர்; பரம ரசிகர்; கான சாஸ்திரத்தில் நுட்பமான தேர்ச்சியடைந்தவர். அவர்நன்கொடைக்கு ஈடுபடாத வித்வான் தென்னிந்தியாவிலேயே கிடையாது.

காலஞ்சென்ற மஹாராஜா மிக்க தெய்வ பக்தி வாய்ந்தவர். ஒரு யோகி. உண்மையில் ஹிந்து தர்மத்தை உணர்ந்து பரிபாலனம் செய்த மஹாராஜா. மன்னராயிருந்தாலும் அவர் உள்ளம் ஆடம்பரத்தில் ஆழ்ந்து நிற்கவில்லை. மன்னர்களுக்கு உரிமைகளுமுண்டு கடமைகளுமுண்டு என்று எக்காலும் மாறாத மறவாதகொள்கையுடையவர். ஆகையினால் தான் அரசாங்கத்தில் இவ்வளவு ஊக்கத்துடன் ஜனங்களின் முன்னேற்றத்தையே கருதி 40 வருஷ காலமாகப் பாடுபட்டுப் பல சீர்திருத்தங்களையும் தொழில்களையும் மைசூர் அரசாங்கத்தில் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

மைசூர் சமஸ்தானத்தின் இயற்கையழகைப்பற்றி நாம் வர்ணிக்க வேண்டியதில்லை. ஆனால் இந்த இயற்கை யழகைச் செயற்கையழகால் இன்னும் பத்துமடங்கு சோபிக்கும்படி மஹாராஜா செய்துவிட்டார். இந்த மன்னர் நாளில்தான் மைசூர் ஒரு 'மாடல்' சமஸ்தானமென்று பெயர் பெற்றிருக்கிறது.

விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் எவர் மூலம் மணம் செய்து முடிக்கப்படுகிறதோ அவர் தான் இந்தியாவுக்கு மோக்ஷம் கொண்டுவரப் போகிறார் என்பது என் கொள்கை. அதை இந்த மன்னர் தான் மைசூரில் முடிசூட்டி வைத்திருக்கிறார். இதுவல்லாமல் நமது நாட்டில் செழிப்பேது, செல்வப் பெருக்கேது, சுகமேது?

மைசூரின் வருஷா வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தைப் படித்துப் பார்த்தால் இதன் கருத்து விளங்கும். இவர் ஆட்சியில் தான் மந்திரிகளில் மணியாக விளங்கும் மூன்று இரத்தினங்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டனர். ஸர். கே. சேஷாத்திரி ஐயர், தைரிய லக்ஷ்மியுடன் ஆரம்பித்ததை ஸர். எம். விசுவேசுவர

(353-பக்கம் பார்க்க)

*4-8-40ல் திருச்சி ரேடியோவில் செய்த விசேஷப் பிரசங்கத்தின் சுருக்கம்.

# "மன்றோ" கொள்கை

இப்பொழுது "மன்றோ"க் கொள்கையைப்பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். முன்பு, அமெரிக்கத் தலைவரான மன்றோ காலத்தில் ஏற்பட்ட இந்தக் கொள்கை இவ்வளவு தூரம் பிரபலப்படுவதற்கு உலக யுத்தம் ஒரு காரணமாகும். கொஞ்ச காலமாக இந்தக் கொள்கையை அமெரிக்க ராஜ தந்திரிகள் அவரவர்களுக்கு இஷ்டப்படி விளக்கி வந்திருக்கிறார்கள். சமீபத்தில் அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரி ஸ்ரீ கார்டல் ஹல் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். ஐரோப்பிய ராஜீய விஷயங்களில் அமெரிக்கா தலையிடாமல் இருந்தால்கூட அவர்கள் கொள்கை ஒத்திருக்கும்வரை அமெரிக்கா மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்கும் என்று கூறியிருக்கிறார். அதாவது, இஷ்டப்பட்டால் அமெரிக்கா ஐரோப்பிய யுத்தத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் என்பதுதான் அர்த்தம். ஆனால், அமெரிக்காவிலுள்ள பிரஞ்சு காலனிகள் சம்பந்தமாக ஹல் கொள்கையை விளக்கியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஒரு ஐரோப்பிய நாட்டின் காலனிகளை மற்றொரு ஐரோப்பிய நாடு கபளீகரம் செய்வதை அமெரிக்கா அனுமதிக்காது. இந்த நிலைமையை நிர்வகிப்பதில் அமெரிக்காவுக்குப் பூரணமான பொறுப்பு உண்டு. இதுதான் ஹல்லின் வியாக்கியானம்.

இதே விஷயத்தைப்பற்றி அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதிலுள்ள சில புரட்சிகரமான அம்சங்களை நாம் ஆராய வேண்டும். ரூஸ்வெல்ட் ஹல் சொன்னது போலவே அமெரிக்கா தேசத்தில் இருக்கும் எந்த நிலையையும் வேறு ஐரோப்பிய நாடுகள் தலையிட்டுக் கலைக்க அமெரிக்கா சம்மதித்துக்கொண்டிராது என்பதைத் தெளிவு படுத்தியிருக்கிறார். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் ரூஸ்வெல்ட் கூறியிருப்பது மட்டும் வேறு விதமாயிருக்கிறது. ஐரோப்பிய நெருக்கடியில் அமெரிக்கா நிச்சயம் தலையிட்டுக்கொள்ளாது" என்பதை நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

சென்ற 20 வருஷங்களாக எவ்வளவோ தடவைகளில் "மன்றோ" கொள்கைக்கு லீவு கொடுத்திருப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஐரோப்பிய விஷயங்களிலும் மற்ற கண்ட விஷயங்களிலும் அமெரிக்கா தலையிடாமலா இருந்திருக்கின்றது? சென்ற ஐரோப்பிய யுத்தத்தில்கூட வில்ஸன் தலையிட்டிருக்கிறார். அமெரிக்காவுக்கு மற்ற கண்டங்களிலும் காலனிகள் இருக்கும்போது, அந்தந்தக் கண்டங்களில் நடக்கும் அரசியல் புரட்சிகள் எப்படி அமெரிக்காவைப் பாதிக்காமல் இருக்க முடியும்?

உதாரணமாக, ஜப்பானுக்கருகிலுள்ள பிலிப்பைன் தீவை ஜப்பானியர் படையெடுக்கிறார்களென்று வைத்துக் கொள்ளுவோம். அது ஆசியாவைப்பற்றின சமாசாரமென்று அமெரிக்கா பேசாமல் இருந்து விடுமா? ஆகையால் அமெரிக்கா "மன்ரோ" கொள்கையைப் பாஷ்யம் செய்வதில் மிகவும் முரண்பாடு இருக்கிறது.

ரூஸ்வெல்ட் "பிறர் விஷயங்களில் அமெரிக்கா தலையிடக்கூடாது, அமெரிக்கா விஷயத்தில் பிறர் தலையிடக்கூடாது" என்று சொன்னதுடன் நின்று விடவில்லை. ஐரோப்பிய, ஆசிய சிக்கல்களுக்குக்கூட ஓர் யோசனை சொல்லி, ஐரோப்பிய, ஆசிய விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளுகிறார்! அதாவது, ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும் தனித்தனியே 'மன்ரோ' கொள்கை இருக்க வேண்டுமாம். அந்தந்த நாட்டுப் பிரச்னைகளை அந்தக் கண்டத்திலுள்ள நாடுகளே ஒன்றுசேர்ந்து தீர்க்க வேண்டுமாம். எந்த வல்லரசின் அபிப்பிராயம் முடிவாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றி அவர் சொல்லவில்லை. ஐரோப்பாவில் ஜர்மனிக்கும், ஆசியாவில் ஜப்பானுக்கும் பலம் தேடிக்கொடுப்பதாக இந்த யோசனை அர்த்தம் படக்கூடும்.

# மன்றோ கொள்கை

அமெரிக்கா கண்டத்தில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற ஆசைதான் இந்த வியாக்கியானத்துக்கு அடிப்படையான காரணமென்று பலர் ஊகிக்கிறார்கள். இந்த ஆசையைக் கானடா, தென்னமெரிக்கா போன்ற மற்ற அமெரிக்க நாடுகள் எப்படி அனுமதிக்குமென்றுதான் தோன்றவில்லை.

சமீபத்தில், ஜப்பானிய பிரதம மந்திரி "ஆசியா ஆசியருக்கே" என்ற கொள்கையைக் கிளப்பினாரல்லவா, அதை ஊர்ஜிதம் செய்வது போலிருக்கிறது ரூஸ்வெல்டின் பேச்சு. ஆசியா கண்டத்திலுள்ள பிரச்னைகளை ஆசியரே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ரூஸ்வெல்டின் யோசனையை ஏற்றுக்கொள்வதாயிருந்தால், இந்தியா, சைனா, இந்தோ சைனா, சயாம், மலயா— இந்த நாடுகளெல்லாம் ஜப்பான் உறவைத் தேடிக்கொள்ள வேண்டும் என்றாகிறது. வேறு எந்த ஐரோப்பிய, அமெரிக்க வல்லரசும் தலையிடாவிட்டால் ஜப்பான் அந்தக் கூட்டுறவை எந்த விதத்தில் உபயோகித்துக் கொள்ளும் என்பது ஸ்வாரஸ்யமான விஷயம்.

ஸ்ரீ. அரிடா ஆசிய மன்றோ கொள்கையைப் பற்றித் தெளிவாகச் சொல்லி விட்டார். ஆசிய நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் கலைகளிலும் நாகரீகத்திலும் எவ்வளவு ஒற்றுமையிருக்கிற தென்பதைப் பற்றிக் கூறிவிட்டு, ஒரு 'புது முறையை' அமைப்பது எவ்வளவு நன்றாக இருக்குமென்று வற்புறுத்தினார்.

இந்த புதுமுறையை அமைப்பதற்குத்தான் ஜப்பான் சைனாமீது படையெடுத்திருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. அதற்காகத்தான் மஞ்சுகோவில் ஓர் பொம்மை அரசாங்கத்தை நிறுவியிருக்கிறது. ஜப்பான் இந்தோ சைனா அருகில் கப்பல் படையைக் குவித்திருக்கிறதைப் பார்த்தால் நிலைமையை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டியவர்களாகிறோம்.

சமீபத்தில், சைனாவுக்குத் தளவாடம் அனுப்பும் விஷயம் பற்றி ஜப்பான் பிரிட்டனுக்கு அனுப்பியுள்ள அறிக்கைகளைப் பார்க்கப் போனால் ஆசியாவில் ஜப்பான் முக்கியத்வம் வகிக்க ஆசைப்படுவது வெளியாகிறது.

ரூஸ்வெல்ட் "மன்றோ" வியாக்யானம் அமெரிக்காவுக்குப் பொருத்தமாயிருக்கலாம். அல்லது பொருத்தமில்லாமல் இருக்கலாம். ஆனால் ஆசியா சம்பந்தப்பட்டவரையில் ஜப்பானை மத்தியில் கொண்ட எந்த 'மன்றோ' கொள்கைகளையும் அனுமதிப்பது முடியாத காரியம். மக்களின் அடிப்படையான பிரச்னையை மன்றோ கொள்கைகள் தீர்க்கமுடியாது. ஏகாதிபத்ய நாடுகளுக்கும் அடிமை நாடுகளுக்கும் இப்போதுள்ள அடிப்படையான சம்பந்தம் தீர்ந்தாலொழிய உலகத்தில் நடக்கும் போர்களுக்கும், பதில் போர்களுக்கும் முடிவே கிடையாது என்பதுதான் பல அறிஞர்கள் அபிப்பிராயம்.

---

(351-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயாவும், ஸர். மிர்ஸா எம். இஸ்மெயிலும் பூர்த்திசெய்து விளம்பரப்படுத்தி அமுலுக்குக் கொண்டுவந்து ஜனங்களுக்குப் பயன்படுமாறு செய்து வைத்தனர்.

மன்னரும் மந்திரியும் அரசியல் ஜ்வாலைக்கு எண்ணெயும் திரியும்போல்பவர். மந்திரி வேலை எவரும் பார்க்கலாம். ஆனால் மன்னர் வேலையில் இயல்பில் குணமும் சீலமும் ஞானமும் இருந்தால்தான் செங்கோல் செலுத்த முடியும். இவர் நோக்கங்களையும் குணங்களையும் அடிப்படையாகக் கொண்ட மஹாராஜா ஜயசாமராஜேந்திர உடையார் இப்பொழுது மைசூர் சிம்மாசனத்தில் ஏறியிருக்கிறார் என்பதும் பாக்கியம்தான். இவர் நாளிலும் அதே ஆட்சி குறைவின்றி நடக்குமென்பதில் ஐயமில்லை. அதுவே நமது பிரார்த்தனை.

# பணிவும் பருமனும்

[டாக்டர் கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பெல்காம்.]

சென்னை அரவிந்த நாடகமேடையில் ஸ்ரீமஹிளாதேவி நடித்துவந்தாள். வயது இருபதுக்கு மேலில்லை; அழகு எவர் மனதையும் கவரக்கூடியது; சாரீரம், ஸங்கீத ஞானம், பரதநாட்டியத் திறமை எல்லாம் வெகு அற்புதம். மஹாராஜாக்கள் முதற்கொண்டு ஜட்கா வண்டிக்காரர்வரை எல்லோரும் ஸ்ரீமஹிளாதேவியை நினைத்து நினைத்துப் பெருமூச்சுவிட ஆரம்பித்தார்கள். அவளோடு அநேக நாடகங்களில் நடித்த கண்ணனும் அவள் அழகில் ஈடுபட்டு அவளிடம் தன் உடல், பொருள் ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்யத் தயாராக விருந்தான். அவளும் இசைந்து அவனை மணம் புரிந்துகொண்டாள்.

மேலும் மேலும் ஸ்ரீமஹிளாதேவியின் கியாதி தமிழ்நாடு முழுவதுமே பரவலாயிற்று. நாளடைவில் மஹிளாதேவி தமிழ்டாக்கி உலகத்தின் முதல் நக்ஷத்திரமாக விளங்கினள். சினிமா பத்திரிகைகளில் அவள் படம் அடிக்கடி பிரசுரிக்கப்பட்டது. மஹிளா சோப்பு, மஹிளா காப்பி ஹோட்டல், மஹிளா டாக்கீஸ், மஹிளா கிருமபோன் என்று எங்கும் ஸ்ரீமஹிளாதேவி பெயரே வழங்குவதாயிற்று.

கண்ணனும் மஹிளாவும் ஏதோ ஒன்றாகத்தான் குடித்தனம் செய்து வந்தார்கள். ஆனால் பேருக்குத்தான் "குடித்தனம்." கண்ணன் சென்னை டாக்கிசில் டைரெக்டர் வேலை பார்த்து வந்தான். மஹிளாவோ பாதிவேளை டீபார்ட்டிகளிலும், பிக்னிக்களிலும் மனதைச் செலுத்தி வந்தாள்.

ஒரு விடுமுறைநாள் மஹிளாவும், கண்ணனும் சில சிநேகிதர்களுடன் கடற்கரை சென்றிருந்தார்கள். திடீரென்று மஹிளா தன் கையிலிருந்த ரோஜாப்பூவை எட்டி ஸமுத்திரத்தி லெறிந்தாள். பக்கத்திலிருந்த வாலிபர்கள் விளையாட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, கண்ணன் ஸமுத்திரத்தில் குதித்து நீந்தி அந்தப் பூவை வாயில் கவ்விக்கொண்டு வரும் சமயம் மஹிளா 'கொல்லென்று' அவனை ஏளனம் செய்வதுபோல் சிரித்தாள். கண்ணன் அவளிடம் வைத்திருந்த காதலெல்லாம் ஒருநொடியில் மாறிவிட்டது. மஹிளா பக்கம் பூவை எறிந்துவிட்டுத் தன் காரில் ஏறிக்கொண்டு ஒரு ஹோட்டலில் போய்ப் பின் தான் அங்கு இருக்கவேண்டிய வசதிகளைச் செய்துகொண்டான்.

தான் செய்த குற்றம் மறந்து, தன் கணவன் மற்றவர்முன் தன்னை அவமானப் படுத்தியதற்குத் தக்க தண்டனை தேடுவதாகச் சபதம்செய்தாள். சென்னை டாக்கீஸ் முதலாளியிடம் கண்ணனை டைரெக்டர் பதவியை விட்டுத் தள்ளாவிட்டால் தான் இனி ஒரு படத்திலும் நடிக்க முடியாதென்று பயமுறுத்தினள். பாவம், வி. அ. செசு. சு. முதிரமாணிக்கம் செட்டியார் என்ன செய்வார்? மஹிளா தன் கம்பனியை விட்டுப் பிரிந்தால் தன் வரும்படி குன்றுவது நிச்சயம். கண்ணன் வேலையை இழந்தான்.

மஹிளாவின் கர்வம் அபரிமிதமின்றிப் பொங்கிற்று. சினிமாப் பத்திரிகைகளை எல்லாம் தான் வாங்கி மற்றெல்லா நடிகர்களையும் தாக்கிப் பத்தி பத்திகளாக எழுதச் செய்தாள். ஜனங்களுக்கு அவள் குணம் தெரிந்தபோதிலும் அவள் நடித்த படங்களுக்கு அவர்கள் போகத்தான் செய்தார்கள். பொதுக் கூட்டங்களில் "சினிமா உலகத்தின் ராணி" "ஸங்கீத மீனலோசனி" "ஹம்ஸ நாட்டிய சித்ராங்கி" என்ற பட்டங்களும் அளித்தார்கள்.

எல்லாம் மஹிளா நினைத்தபடியே நடந்துவரும் சமயம், திடீரென்று அவள் உடம்பு பூரிக்க ஆரம்பித்தது. 110 பவுண்டிலிருந்து 112 ; 115 ; 120 ; 130 ; 145; 160! ஓடிப் பார்த்தாள் ; ஆடிப் பார்த்தாள் ; பட்டினி கிடந்து பார்த்தாள் ; அரிசிக்குப் பதில் கோதுமையை

யும், காப்பிக்குப்பதில் இன்ஸ்டண்ட் போஸ்டத்தையும் சாப்பிட்டுப்பார்த்தாள்; ஒரு பிரயோசனமும் இல்லை; பாடும்போதும் பேசும்போதும் களைப்பெடுக்க ஆரம்பித்தது.

கொஞ்சம் கொஞ்சமாக ஜனங்கள் மஹிளாதேவியின் வலையிலிருந்து தப்ப முயற்சித்தார்கள். மஹிளா படங்கள் காலிக் கொட்டகைகளில் காட்டவேண்டிய தாயிற்று. வி. அ. செசு. சு. முதிர மாணிக்கம் செட்டியார் தீர யோசனை செய்து மஹிளாவை முதல் நக்ஷத்திர ஸ்தானத்திலிருந்து தள்ளிவிட்டார். இன்னும் சில மாதங்களில் மஹிளா கம்பனியை விட்டே விலகிக்கொள்ள வேண்டிய தாயிற்று.

ஒரு வருஷத்திற்குள் மஹிளாவை ஜனங்கள் மறந்துவிட்டார்கள். மஹிளா சோப்புக்கள் வஸந்தா சோப்புக்களாகப் புதிய அவதாரமெடுத்தன. மஹிளா காப்பி ஹோட்டலுக்கு வஸந்தா கபே என்று ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தியே நாமகரணம் செய்தார். நாளடைவில் பழைய சிநேகிதர்கள்கூட மஹிளாவை அண்டுவதை நிறுத்திவிட்டார்கள்.

திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடில் ஒரு வீட்டின் மூன்றாவது மாடியில் ஒரு சிறிய அறையில் மஹிளா தன் காலத்தைத்தள்ளி வந்தாள். அறையில் ஒரே ஜன்னல் தான்; அதன் பக்கம் உட்கார்ந்துகொண்டு பைக்ராப்ட்ஸ் ரோடில் நடக்கும் சந்தடிகளைக்கவனித்துக் கொண்டிருப்பாள்.

ஒருநாள் இருட்டும் சமயம். தன் துக்கத்தைத்தாங்க முடியாமல் மஹிளா தன் மாடியை விட்டு இறங்கிப் பைக்ராப்ட்ஸ் ரோட் வழியாக திருவல்லிக்கேணி பீச்சு பக்கம் நடந்தாள். பக்கத்தில் குப்பைத் தொட்டிமேல் கிடந்த ஒருகிழிந்த படம் அவள் கண்ணில் தென்பட்டது. நெருங்கி அதை எடுத்தாள். அதுதான் அவள் கண்ணகியாக நடித்த டாக்கியில் எடுத்த படம். துக்கம் ஒருபக்கம், கோபம் ஒரு பக்கம் கொந்தளித்தன. ஆனால் என்ன பயன்? ரேடியோவில் ஒருவர் திருக்குறளைப்பற்றி ஒரு உபந்யாசம் செய்து கொண்டிருந்தார். இம்மொழிகள் தெளிவாக அவள்காதில் பட்டன:

"நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும், குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு."

தனக்கு வந்த கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் உடம்பு பருத்ததனாலல்ல; பணிவு இல்லாததனால்தான். வீண்கர்வம் கொண்டு கண்ணனையும் இழந்து பாழடைந்தாள்.

பீச்சில் ஒருவரு மில்லாத இடத்தில் மஹிளா உட்கார்ந்தாள். ஸமுத்திரத்தி லிறங்கி உயிரை விட்டு விட்டாலென்ன என்று கூட நினைத்தாள். "பார்த்தசாரதிகோவிலுக்குப் போய்ச் செய்தபாவங்களுக்கு மன்னிப்புக் கேட்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு, 'மட மட' வென்று நடந்தாள். சில அடிகள் எடுத்து வைத்தவுடன் "யார், மஹிளாவா?" என்ற வார்த்தைகள் அவள்காதில் விழுந்தன. நிமிர்ந்து பார்க்கும் போது கண்ணன் அவள் முன் நின்று கொண்டிருந்தான்.

"நான்தான் மஹிளா! உன் அழகு என்றும் போல் ஜ்வலிக்கிறதே" என்று சொல்லித் தயங்கி நின்றான் கண்ணன்.

அது ஏதோ உண்மைதான். இரண்டு வருஷம் மூன்று மாடி ஏறி இறங்கியதிலும், கண்ணீர் வடித்ததிலுமாக மஹிளா உடம்பின் கனம் ஒழிந்து மின்னற்கொடி போலாய் விட்டாள்.

"உன் சாரீரம் முன்னைப் போலே இருக்கோ?"

"என்னமோ, நான் பாடி ரொம்ப நாளாச்சு. எப்படியிருந்தாலென்ன! என் காலமெல்லாம் ஆச்சு!"

"ஓகோ! உனக்குத் தெரியாது போலிருக்கு; நான் 'திரும்பவும் டைரெக்டராய் விட்டேன். உன் பாட்டை நான் உடனே கேட்டு அதன் தன்மையைப் பார்க்கணும். வா, போவம்."

"உங்களிஷ்டம். ஆனா கோவிலுக்குப் போய் விட்டு உங்கள் வீடு போவம்."

மேல் நடந்தது சொல்ல வேண்டியதில்லை. மஹிளா இன்னும் டாக்கி ராணியாக விளங்குகிறாள். அவளும் கண்ணனும் ஏகமனதாக வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

# *சுகாதார நலன்கள்

[ராவ் பகதூர் டாக்டர் டி. எஸ் திருமூர்த்தி]

## ரண ஜன்னி

மற்றக் கொடிய வியாதிகளோடு ஒப்பிடும்போது இது ஒரு அபூர்வமான வியாதி என்றே சொல்லவேண்டும். என்றாலும், உயிருக்கு ஆபத்தை விளைக்கின்ற இதன் வலிப்பு—அதாவது இழுப்பு என்பதை ஆதிகாலத்திலேயே எல்லோரும் அறிந்திருந்தார்கள். இதற்கு 'வாய்ப்பூட்டு' வியாதி என்றும் பெயர். எனினும் 1884—லேயே இதைத் தொத்து வியாதி என்று அறிந்திருந்தனர். 1819-ம் வருஷத்தில் வான்பேரின் என்பவரும் கிடரைடோ என்பவரும் இதற்கும் டிப்தீரியாவுக்கும் இஞ்செக்ஷன் செய்ய—அதாவது ஊசி குத்த—மருந்து தயாரிக்கலாம் என்பதைக் கண்டுபிடித்தார்கள். வியாதியின் அணுக்கள், குதிரை லத்தி, சாணம், குப்பை, மண், தூசி முதலியவைகளின் மூலமாக மாத்திரம் அல்ல, அசுத்தங்கள் ஆஸ்பத்திரியிலுள்ள ஆயுதங்கள், கட்டுக்கட்டும் துணிகள் முதலியவைகளினின்றும் கூட காயங்களுள் சென்று, விருத்தியாகி, விஷத்தை உண்டாக்கி, அது பரவி, வியாதியின் சின்னங்கள் ஏற்படுகின்றன.

ரண ஜன்னி உண்டாகாமல் தடுப்பதற்கு அதன் இஞ்செக்ஷன் மருந்துதான் முக்கியமானது என்பது இப்போது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சென்ற மகா யுத்தத்தில் இதன் குணம் நன்கு வெளியாயிற்று. ஆனால் வியாதியின் சின்னங்கள் தோன்றுவதற்கு முன்னரே இதனைப் பிரயோகிக்க வேண்டும்.

மலஜலங்களினால் பரவும் வியாதிகள் வாந்திபேதி, சனிபாத ஜன்னி (டைபாயிட்) முதலியன.

இவ்வியாதிகளைத் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடித்ததே சுகாதார சாஸ்திரத்திற்கு ஒரு பெரிய வெற்றி என்று சொல்ல வேண்டும். இவை எதனால் ஏற்படுகின்றன, எவ்வாறு பரவுகின்றன, எப்படித் தடுக்கலாம் என்ற விஷயங்கள் இப்போது நமக்கு நன்றாய்த் தெரியும்.

## டைபாய்ட்

தன்னைச் சேர்ந்தவர்களின் சகாயமின்றித் தானாகமட்டும் டைபாய்ட் ஜுரத்தினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாதென்பதை எல்லோரும் இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கே வியாதி உண்டாகாமல் தங்கள் சரீரத்திலுள்ள இந்த ஜுர அணுக்களைப் போஷித்து வருபவர்கள் உண்டு. மேலும் டைபாய்ட் ஜுரம் வந்து சொஸ்தமானவர்கள் வெகு காலம் வியாதி அணுக்களை மூத்திரத்திலும்,மலத்திலும் கழித்து வருகிறார்கள்.

இவ்வாறு விஷ அணுக்களைப் போஷித்து வரும் ஆளைச் சமையலுக்கோ அல்லது வேறுவேலைக்கோ, மருத்துவச்சியாகவோ அல்லது பால்காரனாகவோ அமர்த்திக்கொண்டால், வேறு வினையே வேண்டாம். இவ்வாறிருப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் ஆகாராதிகளைக் கெடுத்துவிடாதபடியும், தொடாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.இது சுலபமான காரியமல்லஎன்றாலும் மற்ற தேசங்களில் இம்மாதிரியான பரீக்ஷைகளைச் செய்தும், சட்டங்களை ஏற்படுத்தி அமுலுக்குக் கொண்டுவந்தும் இருக்கிறார்கள். இந்த ஜுரம் வராதபடி பாதுகாக்க இஞ்செக்ஷன் செய்துகொள்ளலாம். நோய் வராதபடி செய்ய இதர நடவடிக்கைகளும் உண்டு.

## காலரா அல்லது வாந்திபேதி

கங்கா நதி சங்கமப் பிராந்தியமே இந்த வியாதியின் பிறப்பிடம் என்றும், குடிகொண்டிருக்கும் இடமென்றும் சொல்லப்படுகிறது. இதன் குணங்கள் நன்கு

*திருச்சி ரேடியோவில் செய்த பிரசங்கத்தின் விரிவு.

தெரிந்த விஷயமே. மனிதன் தான் செல்லுமிடங்களிலெல்லாம் இதைப் பரப்பு கிறான். டைபாய்ட் சுரத்தின் அணுக்களைப் போஷிக்கிறவர்களைப் போலவே இவ்வியாதி அணுக்களைப் போஷிப்பாரும் உண்டு. ஆனால் அவ்வாறு போஷிப்போருக்குத் திடீரென்று வியாதி உண்டாகி விடலாம். தண்ணீர் நிலையங்களைப் பாது காப்பதாலும், 'ஹாப்கின்' இஞ்செக்ஷன் மருந்தைப் பிரயோகிப்பதாலும் இவ்வியாதியைத தடுக்கலாம். இவ்வாறு ஊசி குத்திக்கொண்டால் அது ஒரு வருஷம் வரை காலரா வரவொட்டாமல் தடுக்கும். ஏக காலத்தில் ஊரெங்கும் இவ்வியாதி பரவினால் குடிக்கும் ஜலத்தை மருந்துகளால் சுத்தம் செய்தல் முதலான ஏற்பாடுகள் செய்கின்றனர்.

## சீதபேதியில் இரண்டுவகை உண்டு

ஒன்று, ஒருவகை அணுக்களால் ஏற்படுவது. மற்றொன்று—இன்னொருவித மான கிருமியால் ஏற்படுவது. இரண்டாவது சொன்னது திடீரென்று ஏற்படுவதில்லை, காற்று, விரல்கள், ஈக்கள் முதலியவைகளினால் இந்த வியாதி பரவுகிறது. இதற்குத் தனிப்பட்ட சிகிச்சை முறையைக் கண்டு பிடித்து விட்டார்களென்றே சொல்லவேண்டும். ஆனால் முதற்சொன்ன வயற்றளைச்சலுக்கோ, சரியான இஞ்செக்ஷன் மருந்து கண்டுபிடித்து விட்டதாக இன்னும் சொல்ல முடியாது. இதைத் தடுக்க டைபாய்ட் ஜுரத்துக்குச் சொன்ன முறைகளையே கையாளவேண்டும்.

## கொக்கிப்புழு வியாதி

இதனால், இந்தியாவைப்போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் உள்ள லக்ஷக்கணக்கான ஜனங்கள் சரீர செளக்கியத்தை இழக்கிறார்கள். தேகபலம் குன்றி ஒருவகை சோகை உண்டாகிறது. இரத்தம் குன்றிப்போகிறது. உஷ்ணப் பிரதேச நாடுகளில் இது பெருந்தொல்லையே.

மற்றைய கிருமிகளைப்போல இது சரீரத்தினுள் பெருகுவதில்லை. ஈரமான தரையிலிருந்தும், முட்டையிலிருந்தும் வரும் குட்டிப் புழுக்களானவை அப்போதைக் கப்போது சருமத்தின் மூலமாக சரீரத்தினுள்ளே செல்லுகின்றன. இவ்வாறு நீடித்த காலமாக புழுக்கள் பிடித்துக் கொண்டுவரும். குடலுக்குள்ளிருக்கும் ஒவ்வொரு பெரிய புழுவும் சருமத்தின் வழியாய்ச்சென்ற ஒரு முட்டையிலிருந்து உண்டான குட்டிப் புழுவேயாகும்.

இந்த வியாதி வரவொட்டாமல் தடுக்க வேண்டுமானால் கண்ட இடங்களில் மலம் கழிக்காமலும், பூமியை அசுத்தம் செய்யாமலும் பார்த்துக்கொள்வது முக்கியமான காரியம். இவ்வியாதியால் பீடிக்கப்பட்டவர்களைச் சிகிச்சை செய்து அவர்களைக் குணப்படுத்துவதால், பூமியில் இந்த வியாதி புழுக்கள் குறையும். கால்களில் பாதரட்சை யணிந்துகொண்டு நடந்தால் நிச்சயமாய் இந்நோய் வராது. இதைச் செய்வது ஒன்றும் கஷ்டமல்ல. ஆனால் இப்படிக்கூட செய்யமுடியாத தரித்திரம் நமது நாட்டில் குடி கொண்டிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இவ் விஷயத்தைப் போதித்தல் மிக்க அவசியம். இவ்வியாதிக்குத் தக்க பல மருந்துகள் வைத்திய சாஸ்திரத்தில் கண்டு பிடிக்கப்பட்டு இப்போது எங்கும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

நன்கு யோசிக்குமிடத்து, இவ்வியாதியைப் போக்குவதற்கு வேண்டியது என்ன? சுத்தமான பழக்க வழக்கங்களே. சுத்தமான பழக்கங்களிருந்தால் கண்ட விடங்களில் மலங்கழிக்கமாட்டார்கள். இவ்வியாதியும் பரவாது. கிராமங்களில் இதைத் தடுக்க முயற்சி எடுத்துக் கொள்வதால், ஜனங்களுக்கு விஷயங்கள் தெரிய வருகின்றன. இதனால் டைபாயிட் ஜுரத்தைப்போன்ற மற்ற வியாதிகளையும் அடக்கலாம்.

இனி எச்சில், சளி, முதலியனவகளின் மூலம் பரவும் வியாதிகளைப்பற்றித் தெரிந்து கொள்வோமேயானால், மிகவும் நல்லதே. முன்சொன்ன வியாதிகளாவது பரவாயில்லை. இவைகளை அடக்குவது மிகமிகக் கஷ்டம் என்பது விளங்கும். இவ்வியாதிகள் எச்சில், சளி, முதலியவைகளின் மூலம் மாத்திரம் அல்ல. நாம் உட்கொள்

ளும் ஆகாரம், பருகும் பானம், கை, கோப்பை, கிண்ணம், கரண்டி, முதலிய வாய்க்கு அருகே கொண்டுபோகப்படும் எல்லா வஸ்துக்களின் மூலமாகவும் இந்த வியாதிகள் பரவுகின்றன.

இவ்வாறு மிகவும் வியாபித்திருப்பது க்ஷயரோகம். மனிதன் தனது காளைப் பருவத்திலேயே இதற்கு இரையாகிறான். முன்னேற்றம் அடைந்திருக்கும் மற்ற நாடுகளிலெல்லாம் இந்நோய் குறைந்துகொண்டுவர நம் இந்தியாவில் மட்டும் இது அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதுவும் நமது துர்ப்பாக்கியமே. எளியோரிடமே இதை அதிகமாகக் காணலாம். வறுமையினாலே தேகம் குன்றிப் போகிறது. வசிப்பதற்குச் சரியான வீடுகள் இருப்பதில்லை. கூட்டம் அதிகம். இதனால் வியாதி வரவொட்டாமல் தடுக்கச் சரீரத்தில் போதுமான பலம் இருப்பதில்லை. ஆகையால் இவ் வியாதியைப் போக்கவேண்டுமானால், முதலாக வறுமையைப் போக்கடிக்க வேண்டும். இவ்வியாதியைத் தடுப்பது இரண்டு முக்கியமான விஷயங்களைப் பொறுத்தது.

1. இந்த வியாதி கபத்தின் மூலமாகவே ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகிறது.

2. வியாதிப்பட்ட பசுக்களினின்றும், குழந்தைகளுக்குப் பால் மூலமாக இவ் வியாதி வருகிறது. ஆகையால், இதைத் தடுக்க வேண்டுமானால்,

**1. கபத்தை கண்ட இடங்களில் துப்பக் கூடாது,**

**2. சரீர பலத்தைக் குறைக்காமல் கவனித்துக் கொள்ளவேண்டும்,**

**3. க்ஷய ரோகப் பசுக்களைக் கொன்று விடவேண்டும்.**

மற்ற தேசங்களில் இந்த வியாதியைத் தடுப்பதற்குப் பல நிபந்தனைகளைச் சட்டப் படுத்தியிருக்கிறார்கள்.

டிப்தீரியா (Diphtheria). நமது சாஸ்திர அறிவின் முதிர்ச்சியால் இதை முற்றிலும் தடுக்கக்கூடிய நிலைமையில் இப்போது நாம் இருக்கிறோம். இது எப்படி உண்டாகிறது என்பதும், பரவும் முறையும் நமக்கு நன்றாய்த் தெரியும். இதற்குத் தகுந்த சிகிச்சை செய்ய இஞ்செக்ஷன் மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதை வரவொட்டாமல் தடுக்கவும் இஞ்செக்ஷன் செய்யலாம்.

நிமோனியா என்னும் கபவாத சுரம்-இது சுவாசகோசங்களைப் பீடிக்கும் ஓர் வியாதி: இதன் தலைப்பின் கீழ் அநேக வியாதிகள் இருக்கின்றன. இது முக்கியமாய் ஓர்விதக் கிருமியால் உண்டாகிறது. சீக்கிரத்தில் உயிரை வாங்கும் வியாதிகளில் இது மிகவும் கொடிய வியாதி. ஒரு முறை வந்தால் மறுமுறை வராது என்று சொல்வதற்கில்லை. திரும்பத் திரும்ப வருதலே சகஜம். இதைத் தடுப்பது எப்படி என்பது இன்னும் ஒரு பெரிய பிரச்னையாகவே இருந்து வருகிறது.



"மட்டமான சோப்புகள் எனக்கு உதவாது—
நான் உபயோகிப்பது
ஸன்லைட் சோப்."




"முன்பெல்லாம் நான் மட்டமான சோப்புகள் உபயோகித்து வந்தேன். ஒரு நாள் என் சிநேகிதி ஒருவளை அவள் தன் துணிகளை அவ்வளவு பிரகாசமான வெண்மையாக எப்படி வெளுக்கிறாள் என்று விசாரித்தேன். தான் ஸன்லைட் சோப் உபயோகிப்பதாகவும், அது அளிக்கும் அதிகப்படி நுரைதான் தன் துணிகளை அவ்வளவு அற்புதமான வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்வதாகவும் அவள் கூறினாள். அன்று முதல் நான் மட்ட ரகமான சோப்புகளைத் தொடுவதுகூட இல்லை. ஸன்லைட் சோப் ஒன்றையேதான் உபயோகித்து வருகிறேன். கொஞ்சமும் அழுக்கின்றி பளிச்சென்று பிரகாசிக்கும் என் துணிகளின் அழகை இப்பொழுது எல்லோரும் புகழ்ந்து பேசுகிறார்கள்."

# ஸன்லைட் சோப்

சுத்தமான தாவர எண்ணெய்களால் இந்தியாவிலேயே செய்யப்பட்டது.

S. 18-50 TM — LEVER BROTHERS (INDIA) LTD.

# இலக்கியம்

[ நீ. ரா. ]

நம் எவர்க்கும் பழைய நினைவுகள் அடிக்கடி வருவதுண்டு. இதில் சுவாரஸ்யம் என்ன என்பதைக் கவனிப்போம். சிறு வயதில் விளையாடியது, பிறர்நம்மைச் சீராட்டியது; பிறகு நம் கல்வி அனுபவம்; இதில் உபாத்தியாயரை வேடிக்கைப் பெயரிட்டு நமக்குள் பேசிக்கொள்வது, வகுப்பில் "இளிச்சவாய்" தமிழ், ஸம்ஸ்கிருத வாத்தியார்களைத் திண்டாட அடிப்பது, அதற்கடுத்த "ஸ்டேஜில்" கல்யாணம் முதலிய இன்பவாழ்க்கை, ஒத்த வயதுடையவருடன் உண்மை நட்புடன் உறவாடுவது, அதன் பின், வாழ்க்கைப்போராட்ட வேடிக்கை. இவையெல்லாம் நினைக்கும்போது நம் மனக்கண்முன் வருவனவெல்லாம் எப்படிப்பட்ட அனுபவங்கள்? எல்லாம் ஒரே வேடிக்கையானதும், இன்பமயமானதும்தான் இது ஏன்?

சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். பெரும் வீரர்களின் தீரச்செயல்கள், வெற்றிமேல் வெற்றி. பெரும் மக்களின் அரசியல் அபிவிருத்தி, கலை வளர்ச்சி. பண்டை வாழ்க்கைச் சித்திரமோ அதி உன்னதமானவை. எவரும் எளிய வாழ்வு நடத்தினர். இன்று போல்தேவைகள் அதிகமில்லை. காலஞ்சென்ற நாகரிகங்களெல்லாம் இலட்சிய மயமானவை. என்ன வாழ்வு, பணமுண்டா, பட்டினியுண்டா? தற்காலம் மாறி. மாறிக் கெட்டுவிட்டது. நம்மைப் போல துரதிருஷ்டவசமான தலைமுறை வேறொன்றுமில்லை. இதே போக்கில்தான் நாம் சரித்திரத்தை நோக்குகிறோம். ஏன்?

கவிதையைச் சிறிது கவனிப்போம். ஆஹா, வாழ்க்கையில் என்ன காதல் வெள்ளம்! ஏழைகளின் வாழ்வில் என்ன திருப்தி, என்ன இனிமை! கழிந்து போன பழக்க வழக்கங்கள் தாம் எவ்வளவு உயரியன! எல்லாம் காலக் கூற்று, காலம் கலிகாலமல்லவா? பணம்—பணம், இதுதான் உலகமாம். என்ன மோசமான வேலை—பணத்திற்காகப் பாடுபடுவது! ஒரு சுகமுண்டா, நிம்மதியுண்டா? இது எல்லாம் வெறும் கானல் நீர்! இப்படித்தான் கவிதைப் போக்கைக் காண்கிறோம். இது சரிதானா?

நம் இளமை நினைவுகள், சரித்திரப் போக்கு—இவை, கழிந்து போனவற்றைப் புகழ்வதையும், அன்றாட வாழ்க்கையைக் கூறுவதையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம். இப்படிச் சாமான்ய அறிவுக்குத் தோன்றுவதும், இச்சாமானியருக்காகப் பெரும் மூளைகள் இவ்வாறு சொல்லுவதும் சரிதானா? இளமையெல்லாம் துன்பக் கலப்பில்லா இன்பவெள்ளமாகவா இருந்தது? குழந்தைகளிடையே, பயமும், படிப்பில் தினசரிஈடுபடுதலில் வெறுப்பும், வகுப்பில் படும் கஷ்டமும், பிற்பாடு உலகில் உழலுவதில் கவலையும் கஷ்டமும், சிறு சிறு சண்டை பூசல்களும், அதன்பின் வேலை கிடைக்காமல் துன்புறுவதும், கிடைத்தால் மாடுபோல் உழைப்பதும், குடும்பக் கவலைகளும், இவையெல்லாம் நம் பழைய நினைவு அலைகளில் தோன்றுவதில்லையே! இதுதான் காலப்போக்கின் ரகசியம். காலம் போகப்போக, நாம் அசுசியான விவரங்களையும் சில்லரைத் தொந்தரவுகளையும் மறந்துவிடுகிறோம். இன்பகரமானதும், பெருமை தரத்தக்கதுமான பெரிய பெரிய விஷயங்களே நம் நினைவுக்கு வருகின்றன. இன்றைய கஷ்ட வாழ்வுடன் சீர்தூக்கும்போது, பழைய அனுபவங்களெல்லாம் தங்கமாய்த் திகழ்கின்றன. தினசரி வாழ்க்கையின் பல சில்லறை மாசுகளை அகற்றிக் காலதேவன் நம் பழைய அனுபவ ஞாபகத்தைப் பத்தரை மாற்றுத் தங்கமாய்த் தருகிறான். காலப் போக்கின் கவிதா சக்தியே இதற்குக் காரணபூதமாகும்.

இதேபோல்தான் சரித்திரமும். பண்டைய மக்களும் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடத்தான் செய்தார்கள். அதோடு

அவர்களுக்கு இன்று கிடைக்கும் தொழில் முறைச் சாதனங்கள் இல்லை. அவருள்ளும் ஏழை, அடிமை யென்று பெரும்பாலார் இருந்தனர். ஆனால், காலத்தின் கிரியாசக்தி இங்கும் உண்மைக்கு மாறுபட்ட சித்திரத்தைத்தான் தருகிறது. போனதெல்லாம் பெரிதென்றும், இன்ப வாழ்வை நாம் விரும்பின், பின்னோக்கிச் செல்லவேண்டு மென்றும் பலர் கூறுவது இதனால்தான். உண்மையான உலக சரித்திரம் கூறுவதோ வேறு வகையானது. மனிதசமூக அன்றாட வாழ்க்கையில் இயற்கையுடனும், தம்மிடையேயும்—நடந்த பல போராட்டங்களின் பயனாய் வெகுதூரம் முன்னேறியுள்ளது. இன்றைய நிலையில் பரிபூர்ண திருப்திக் கிடமில்லை யென்றால், அதன் காரணங்களை ஆய்ந்தறிந்து முன்னோக்கிச் செல்ல வேண்டுவதுதான் உண்மைச் சரித்திரம் போதிப்பதாகும்.

கடைசியாகக் கொஞ்சம் கவிதையை நோக்குவோம். காலதேவன் எப்படி எதையும் ஒரே தங்கமயமாக்குகிறானென்பதைக் கண்டோம். இதே வேலையைத்தான் கவியும் செய்கிறானென்று ஆங்கில அறிஞர் 'கார்லைல்' எழுதியுள்ளார். உலகப் பரப்பில் காணும் பொருள்களின் சக்கையாகிய வெளித்தோற்றத்தைவிட்டு, உட்புகுந்து பார்த்து அவற்றின் சாரத்தை ரஸித்து வெளியிடுவதே கவிதை; இன்றிருந்து நாளை மாயும் அநித்தியப் பொருள்களினூடே யுள்ள நிரந்தரஸாரத்தைப் பாடுவதே கவிகளின் வேலையென்கிறார். இது வாதத்திற்கிடமான பெரும் விஷயம்; லேசாகப்பேசி முடிவுகாண முடியாது. கவிதை யென்றும், கதையென்றும், கலையென்றும் பேசி அன்றாட வாழ்க்கையைச் சித்தரிப்பதாய் எண்ணி, காதலென்றும், சாதலென்றும் கதைத்து, வாழ்க்கைப் போராட்டத்தினின்றும் நழுவியோடும் திறனையும் கவிதை யெனக் கொள்ளலாமோ? வாழ்க்கை ஒரேமாதிரி இருப்பதில்லை இரு மாறுபாடுகளின் ஒருமையாயும், ஒருமையாயின் இரு வேறுபாடுகளுமாயு முள்ளது. இதில் ஏதேனுமொன்றை உட்பொருளாக வைத்துக் கதைப்பது தவறு. தவிர உலக அரசியல், விஞ்ஞான அறிவு முன்னேற்றங்களை யறிந்து அவற்றிற்கேற்ப மக்களைப் படிப்பித்து, வருங்கால வாழ்க்கையைச் செப்பனிடும் வகையில் அறிஞராய கவிகள் ஈடுபடுவர். நம் பாரதியாரும் உலகப் போக்கிற் கியைய பணியாற்றிப் பாடவும் செய்தார். நிகழ்காலத்தில் விலையாவதும் அறிவு வளர்ச்சியற்றவரைக் கவர்வதுமான துறைகளில் கவிதை செய்வது சாச்வதமாகாது. காலப்போக்கை யனுசரித்து, மக்களுக்குப் புதிய கலைஞானத்தைப் புகட்டும் தீர்க்கதரிசிகளே வேண்டும். வருங்காலத்தை எதிர்நோக்கி அதற்கேற்ப மக்களைத் தயார் செய்யும் பணியாளரே தேவை. இவ்வகையில்தான் உண்மைக் கவிதை உருவெடுக்க முடியும். எக்கலைஞனும் நித்தியத்திற்கு அவாக் கொள்வது இயல்பே. இக் கோரிக்கை, வெறும் பொழுது போக்குக் கதைகளாலும் உலகத்தை மறக்கும் முயற்சியில் வெளியாகும் கவிதையாலும் நிறைவேறுமா?


**சீர்காழி டி. முன்சீப் கோர்ட்**

**O. S. No. 36 of 1940**

வீரராகவ நாயுடு—வாதி.

நாராயணஸாமி நாயுடு வகையறா—பிரதிவாதிகள்.

ஷை நம்பரில் 3-ம் பிரதிவாதியான மாயவரம் தாலூகா தலச்சங்காடு ராமு நாயுடு குமாரர் அய்யலு என்கிற கிருஷ்ணசாமி நாயுடு என்பவருக்கு ஷை நம்பர் வாதி வக்கீல் K. சீதாராமய்யரவர்கள் அறிவிப்பதாவது:

மேல் கண்ட நம்பரின் வாதி உங்கள் வகையறா பேரில் கிரையசாஸன சொத்துக்களில் தன்னிடமிருந்து விலகிய சொத்துக்களின் கிரையத் தொகை ரூ. 678-6-10 ஜாமீன் சொத்துக்களின் ஏல விற்பனை மூலமாயும், உங்கள் வகையறாவாலும் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று தாவா செய்திருப்பதில் உமக்கு நீர் வசிக்கும் சிங்கப்பூர் விலாசத்துக்குச் சம்மன்கள் அனுப்பியும் சர்வாகாததால் சப்ஸ்டிட்யூட் சர்வீஸுக்கு மனு கொடுக்கப்பட்டு அந்தப்படி உத்திரவாகி 19-8-1940-ல் கெடு குறிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கப்படுகிறது.

சீர்காழி
27-7-40

**கே. சீதாராம ஐயர்**
அட்வகேட்.

# விதியின் எழுத்து

[கி. ஸ்ரீ. வேங்கடேசன், பெங்களூர்]

அன்றுதான் நான் அவனைப் பல வருஷங்களுக்குப் பிறகு சந்தித்தேன். அவனைக் கண்டதும் நான் திடுக்கிட்டுவிட்டேன். அதே ராஜுவா, என்னுடன் 5 வருஷங்களுக்கு முன் சுமுகத்துடன், கவலையே இன்னதென்பதை யறியாதவனாகப் பழகிய ராஜுதானா என் முன் நிற்பது என்று சந்தேகித்தேன். அவ்வளவு தூரம் மாறியிருந்தது அவனது உருவம், நடையுடைபாவனை எல்லாம்!

குழிவிழுந்த கண்கள், தாடை எலும்புகள் முன்னுக்கு வந்து, பிரேதத்தின் களை தாண்டவமாடும் முகம், இரத்தம் சுண்டி உடல் வெளிறிட்டிருந்தது. பசிப்பிணியோ அன்றி மனப்பிணிதானோ! அறியேன்! அறியேன்! முத்தாய்ப்பு வைத்தது போன்ற அவனது உடை! காவி வஸ்திரம், வெட்டப்படாமல் தன் போக்கில் விடப்பட்ட தலைமயிர் ஆகியவை அவனை உலகை வெறுத்தவனாக எனக்குக் காண்பித்தன.

“ராஜு! ஏன் இந்த மாற்றம்? இத்தனை நாள் எங்கிருந்தாய்? ஏன் நமக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை? ஆத்தில் எல்லோரும் சௌக்கியந்தானா?”......என்று நான் கேள்விகளைச் சரமாரியாய் அடுக்கினேன்.

அதற்கு அவன் அளித்தபதில் என்னைத் திடுக்கிடச்செய்தது. ராஜுவுக்கு அவ்விதம் நேருமென்றும் விதி அவனை இவ்வளவு தூரம் ஏமாற்றுமென்றும் நான் கனவிலும் கருதியவனன்று. அவனது கதை என்னை வாழ்க்கையில் நம்பிக்கையற்றுப் போகும்படி செய்துவிட்டது.

ஆம். அவன் வாழ்க்கையில் ஏமாற்றமடைந்துவிட்டான். விதி அவனை வெகுதூரம் சோதித்து விட்டது. பாவம்! அவனுக்கு அவ்வளவு கஷ்டங்கள் வந்திருக்க வேண்டியதில்லை யென்றே சொல்வேன்...

ராஜுவும் நானும் பாலிய சிநேகிதர்கள். எப். ஏ பரிக்ஷையில் பாஸ் செய்ததும் எங்களது வாழ்க்கையின் வழியே வேறாகிவிட்டது. அவன் கலியாணம் செய்துகொண்டு வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்கிவிட்டான். நானோ, தன்னந் தனியனாக எனது வாழ்க்கைச் சுழியை நடத்தத் தீர்மானித்தேன். படிப்பு முடிந்ததும், தேச முழுதும் சுற்றிவரப் புறப்பட்டேன்.

எனது வாழ்க்கையில் மூன்று வருடங்கள் தேசசஞ்சாரத்தில் கழிந்தது. இந்தக் காலத்தில்தான் தேசம் மகாத்மாவின் ஆணைப்படி சுதந்திரப் போரில் இறங்கியது. நானும் ஏதோ ஒரு சக்தியினால் பந்தப்பட்டவனாகி, போரில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றேன். ஒரு வருஷச் சிறைவாசத்திற்குப் பிறகு நான் விடுதலையடைந்து எனது நண்பர் ஒருவருடன் வசித்து வந்தேன். அப்பொழுதுதான் நண்பன் ராஜுவைச் சந்திக்க நேர்ந்தது. அவனும் தனது வாழ்வை, அந்த 5 வருடத்திய வாழ்வை, ஏமாற்றமும் துக்கமும் பொருந்திய தனது வாழ்வின் போக்கை என்னிடம் கூறினான்......

* * *

கலியாணம் நடந்த பிறகு ஆறு மாத காலம் அவன் வேலையைத் தேடி அலையாத இடம் ஒன்றுகூட இல்லை. பெரிய வியாபாரிகள், சிறிய வியாபாரிகள், ஏன் காப்பி ஓட்டல்கள்கூட அவனை வரவேற்றன. பாவம்! அந்த ஆறு மாதத்தில் அவன் மிகவும் கஷ்டப்பட்டுவிட்டான். கடைசியாக, அவனது மாமனாருடைய சிபார்சின் பேரில் அவனுக்கு ஒரு இங்கிலீஷ் கம்பெனியில் வேலை கிடைத்தது.

மாதம் முப்பது ரூபாய்க்கு அவன் தனது உயிர் ரத்தத்தை விற்க உடன்பட்டான். எதற்காக? தனது மனைவிக்கும் தனக்கும் வேண்டிய வயிற்றுப் பாட்டிற்காகத்தான். அந்த மனைவி என்கிற

கால்கட்டு இல்லாமல் இருந்திருந்தால், அவனும் என்னைப்போல் ஊர் ஊராக அலையப் புறப்பட்டிருப்பான். அவனுக்கு அந்த வேலை பிடிக்கவில்லை. அதில் அவன் ஒரு சுகத்தையும் காணவில்லை. ஆனால் ஒரு நன்மை. அவனுக்குக் கஷ்டம் என்பது இல்லாமலிருந்தது. இந்த ஒரு ஆறுதலுக்காகத்தான் அவன் அதைப் பிடித்துக்கொண்டிருந்தான். தினந்தோறும் செக்குமாடு போல் அவன் தனது காலத்தை அந்த ஆபீஸில் கழித்து வந்தான்.

இந்த செக்குமாடு போன்ற அவனது வாழ்க்கையில், காலக்கிரமத்தில் ஒரு ஒளியுண்டாயிற்று. ஆனல்...... அந்த ஒளி கூடிய சீக்கிரமே மறைந்து விட்டது.

அந்தப் பெண் குழந்தை பிறந்தபொழுது அவன் வெகு சந்தோஷப்பட்டான். தனது வறண்ட வாழ்க்கையில் ஒரு இன்பம் உண்டாயிற்று; நிலையற்ற தனது வாழ்க்கைக்கும் ஒரு ஊன்றுகோல் கிடைத்தது என்று அவன் திடங்கொண்டான்.

குழந்தையும் வெகு அழகாயிருந்தது. அதை—நாம் பழங்கதைகளில் படிப்போமே, அந்தமாதிரி,—அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். ஆனல், அந்தக் குழந்தை அவனுக்கும் அவனது மனைவிக்கும் வாழ்க்கையினிடையே ஏற்பட்ட ஒரு இனிய கனவாக முடிந்தது.

அந்தக் குழந்தைக்கு—ஸரோஜ் எனப் பெயரிட்டார்கள்—மூன்று வயதாயிருக்கும்போது அக்குழந்தைக்கு திடீரென்று ஒரு நாள் மார்ச்சளி பிடித்துக் கொண்டது. சளியா, சனியா என்பார்களே, அந்த வாக்கு இங்குப் பலித்து விட்டது. சளிகண்ட ஒரே வாரத்தில், எவ்வளவோ டாக்டர்களின் உதவியை நாடியும், பயனின்றி அந்தப் பச்சை மண் இப்பாப பூமியை விட்டுச் சென்றது.

குழந்தைபோன துக்கம், ஆற்றமுடியாத துக்கமாகி விட்டது. ராஜுவுக்கும் லக்ஷ்மி என்னும் அவனது மனைவிக்கும், அவர்களது வாழ்க்கையை மறுபடியும் பேரிருள் கவிந்து கொண்டது. ஆனல், விதியின் விளையாட்டை யாரே கூறமுடியும்? அதுவும், குழந்தை இறந்த ஒரே மாதத்தில் விதியெனுமரசன் தனது கடைசிச் சீட்டை ராஜுவுக்கு எதிராக ஆட்டிவிட்டான்!

குழந்தையைப் பறிகொடுத்த துக்கம் லக்ஷ்மியை மிகவும் நொறுக்கிவிட்டது. ஏன் ராஜுமட்டும் விதிவிலக்கா? அல்ல. அவனுக்கும் மனம் இடிந்துவிட்டது. ஆனலும் பெண் மனம் எப்பொழுதுமே நலினமல்லவா? ஆகவேதான் இந்த துக்கத்தின் முழுவேகமும் லக்ஷ்மியைத் தாக்கிவிட்டது.

மெத்தையினின்றும் ஏதோ அவசரமாக இறங்கி வந்த லக்ஷ்மிக்குக் கால்தடுக்கியது. "ஐயோ!" என்கிற அலறல் கேட்ட ராஜு ஓடிவருவதற்குள் அவள் படிக்கட்டுகளை யெல்லாம் கடந்து வந்து தரைமீது விழுந்து விட்டாள்.

விழுந்தவள் விழுந்தவள் தான்! மறுபடி எழுந்திருக்கவேயில்லை! அழுங்கிய மனம், அத்துடன், ஏற்கெனவே தர்ப்பலமான தேகம் இரண்டும் சேர்ந்து அவளை, அவளது வாழ்க்கையை, முடித்துவிட்டன.

அந்த சமயத்தில் ராஜுவின் மனம்.....!

* * *

திடீரென்று என்னை ஒதுக்கித் தள்ளி விட்டு,

"விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு—[முன்னே
விட்ட குறை வந்து தொட்டாச்சு"

என்ற நந்தன் சரித்திரக் கீர்த்தனையைப் பாடிக்கொண்டே அவன் போய்விட்டான். எங்கு போனனே யான் அறியேன். ஆனல், அவன் சொன்னது என்னவோ உண்மைதான். முன் ஜன்மத்தில் விட்ட குறை தொட்டகுறைதான் அவனது மனைவியும் குழந்தையும்!

---

# பாழடைந்த பங்களா

[ஆர். கே. தியாகராஜன், மயிலாப்பூர்]

"ராமு! கோடை விடுமுறைக்கு பொன்னிக்குடி கிராமத்துக்கு வரையா?" என்றேன் நான் என் நெருங்கின நண்பன் ராமனுதனைப் பார்த்து.

"நானும் தானே! உங்க கிராமத்தைப் பார்க்கனும்னு ஆசையா யிருக்கு, தியாகு. நான் ரெடி" என்றான் ராமு.

"ஆல்ரைட். நாளைக்குப் போகனும், தெரியுமா"

"இப்பவே கிளம்பச் சொன்னாலும் நான் தயார்தான். பொன்னியாறு காற்று வாங்கறத்துக்குத் தபசு பண்ணனுமே"

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, ராமுவும் நானும் கிராமத்திற்குப் புறப்பட்டோம். அங்கு என் அத்தை யிருந்தாள். பட்டணப் படிப்புக்காக வந்து ஐந்து வருஷமாக, கிராமத்துப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. சரி, இந்த வருஷம் இங்கே ரொம்ப வெயில் எரிக்கிறது, கிராமத்துக்குப் போகலாமென்று புறப்பட்டேன், ராமுவுடன்.

"தியாகு! எப்படிக் கிராமத்துக்குப் போகப்போறே?"

"எப்படி போறதா? இதென்ன கேள்வி? நேரே பங்கிரி வரைக்கும் ரயில் போறது. அங்கிருந்து ஜட்கா வண்டியில் போன ஆச்சு."

ரயிலில் ஏறிக்கொண்டு, இருவரும் பங்கிரி வந்தோம். ரயில் அனுபவத்தைச் சொல்ல ஆரம்பித்தால் பக்கம் பக்கமாய் ஆகுமே தவிர, பிசாசோ, பங்களாவோ வராது. அதனால் அதை ஒதுக்கி வைப்பதே நலம்.

பங்கிரியில் 'வீல்' என்ற ஓசையுடன் ரயில் நின்றது. நானும் ராமுவும் ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தோம். நாலைந்து வண்டிக்காரர்கள் எங்களை வந்து சூழ்ந்து கொண்டு, 'என் வண்டிலே ஏறு, சாமி!' என்று கத்திக்கொண்டே எங்களை மூச்சு விட முடியாமல் செய்துவிட்டனர். கடைசியாக ஒரு குதிரை வண்டியில் ஏறிக் கொண்டோம்.

"பொன்னிகுடிக்கு ஓட்டு" என்று கூறிவிட்டு 'அப்பாடா' என்று வண்டியில் சாய்ந்துகொண்டேன்.

"ஏன் சாமி! நீங்க எந்த ஊர்?" என்றான் வண்டிக்காரன். ஆசாமியின் ஊரை யறிந்து கொண்டு அதிகப் பணம் பிடுங்கலாம் என்ற எண்ணம்தான் வண்டிக்காரர்களின் கூடப் பிறந்ததாச்சே!

"நான் பொன்னி கிராமம் தானப்பா. படிப்புக்காகப் பட்டணம் போயி ஐந்து வருஷமாச்சு. இப்பத்தான் மறுபடியும் ஊரைப் பார்க்க வரேன்" என்றேன் நான்.

இதற்குள் ஜட்கா வண்டி ஒரு பெரிய பங்களாவையும் தோட்டத்தையும் கடந்து சென்றது.

"வண்டிக்காரா! இந்த வீடு சின்ன கவுண்டர் வீடுதானே. ஏன் இப்படி பாழாய்க் கிடக்கிறது?"

"ஆமாஞ் சாமி. அவரு வூடுதானுங்க. தோட்டத்திலே கொலை ஒண்ணு நடந்திச்சு. அதனாலே பேய் பிடிச்சுப்போய், பாழாய் கிடக்குது! ஒருத்தர்கூட குடிக் கூலிக்கு வர்மாட்டேங்கறாங்க"

"பேயா" என்றான் ராமு. அவன் பட்டணத்தில் அதிக நாள் இருந்தவனுதலால், பேய்களைப் பற்றி அதிகம் கேள்விப்பட்டதில்லை.

"கொலையா. என்ன கொலை? சரியாய்ச் சொல்லு" வண்டிக்காரன், "அது பெரிய கதைங்கோ. இருந்தாலும் சொல்றேனுங்கோ" என்றான்.

நானும் ராமுவும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டோம்.

* * *

"மூன்று வருஷத்திற்கு முன் நடந்த சங்கதி. அப்போது கருப்பாயியைத்

தெரியாத பேர் கிடையாது. பிச்சுதான் அவளுடைய ஒரே பிள்ளை. வேறு உறவு அறியாதவள். இரண்டொரு வீட்டில் கூலி வேலை செய்து பிழைத்து வந்தாள். குழந்தைமேல் அளுக்கிருந்த ஆசைக்கு அளவில்லை. பிச்சு முதுகில் ஈ உட்காரச் சகிக்க மாட்டாள். கண்ணிமைகள் கண்ணைக் காப்பதுபோலக் காத்து வந்தாள்.

பையன் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தான். சித்திரை மாதம் ஒருநாள் சாயுங் காலம். மாம் பிஞ்சுகள் கண்ணைக் கவருவனபோல, மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்தன. பிச்சுவும் மற்றும் ஐந்தாறு பையன்களும் கவுண்டரின் தோட்டத்தை யடைந்தார்கள். அவர்கள் நாக்கில் மாம் பிஞ்சுகளைக் கண்டபோது ஜலம் ஊறிற்று.

"யாருக்கடா, மரமேறத் தெரியும்?"

"எனக்குத் தெரியும்டா"—என்று, கச்சத்தை இறுக்கிக் கட்டிக்கொண்டு, பிச்சு 'மளமள' வென்று ஏறினன். உச்சிக்குப் போய் விட்டான்.

"டேய்! அதோ யிருக்கு பார்டா. எனக்குப் பறிச்சுப் போடுடா" என்று ஒவ்வொருத்தனும் கத்தினன்.

பிச்சு மாங்காய்களைப் பறித்துப் போட, கீழே நின்ற தோல் வாயன்கள் தின்று கொண் டிருந்தனர்.

"யாரடா, மரத்து மேலே" என்ற கொடூர த்வனி கேட்டது.

"டோய், தோட்டக்காரன் வராண்டா, டோய்,"—கீழே யிருந்த பையன்களில் ஒருத்தன் இருக்கணுமே?—ஊஹூம்.

தோட்டக்கார சின்னன்—ஒரு பெரிய குடிகாரன்—தள்ளாடித் தள்ளாடி மரத்தண்டை வந்தான். பிச்சு மாத்திரம் அப்போது இறங்கி வந்துகொண் டிருந்தான்.

"திருட்டுப் பயலே! மாங்காயா எடுக்கறே?"

'பளார், பளார்'— சின்னனின் கை, பிச்சுவின் கன்னத்தை நன்ருக விங்கச் செய்து விட்டது.

"இனிமேல் மாங்காய் எடுக்கலே. ஐயையோ"

"மாங்கா எடுத்தையோ கை முறிஞ்சுடும். படவா."

* * *

கருப்பாயி பிச்சு வரவை எதிர்பார்த்துக் கொண்டு வாசலிலேயே நின்றுகொண் டிருந்தாள்.

"அம்மா! அம்மா!! ஊ ஊ ஊம்! அம்மா."

"என்னடாப்பா? யார்டா என்ன பண்ணு சொல்லடா?" பெற்ற மனம் கலங்க, அவளை யறியாது கண்ணீர் சொரிந்திற்று.

"அம்மா! சின்னன்......ஊம்...ஊம்... தோட்டக்காரன் ஊம்...ஊம்......அடிச்சாம்மா. ஓ......"

"சின்னனு. அப்படியா சங்கதி."

பிச்சு தான் அடிப்பட்டதைச் சொல்லச் சொல்ல அவளுடைய ரத்தமும் மூளையும் கொதிப்புற்றுக் கொண்டே வந்தன. அவள், பயித்தியச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே வீட்டின் கூரையண்டை ஓடினள். அங்கு துருப் பிடித்துப் போன வாழை யிலை நறுக்கும் கத்தி யிருந்தது.

"பிச்சு, நீ உள்ளே போய்ப் பக்ஷணம் சாப்பிடு" என்ருள் கருப்பாயி; அதில் அன்னை அன்பு ஒலித்தது—கத்தியுடன் வெளி யேறினள். சிறிது சிறிதாக இருளும் வந்துகொண் டிருந்தது.

* * *

"யாரது அங்கே மறுபடியும்? இப்பத் தானே ஒரு மாங்காத் திருடிய பையனைக் கவனித்து அனுப்பிச்சேன். மறுபடியும் தொந்தரவு பண்ண வந்துட்டாயா? இதோ வாரேன்."

சின்னன் அன்றைய கள்ளை உள்ளே விட்டுக்கொண் டிருக்கும் போது, அந்த போதையிலே கருப்பாயி வந்து மரத்துக் கிளையை முறிச்சா, கோவம் வராதா?

"நீதானு அடிச்சே, ஊஹூம்" என்று விகாரச் சிரிப்பு சிரித்தாள் கருப்பாயி. இடுப்பிலிருந்த கத்தி கைக்கு மாறிற்று. சின்னன் பக்கத்தில் வந்த வுடனே தன்

வேலையை அது முடித்தது. என்ன சிரிக்கிறீர்கள்? உங்களால் நம்ப முடிய வில்லையா? நான் என்ன செய்வேன். இதே பேபரில் 'நியூஸாக வந்திருந்தால்?'

* * *

இப்படி கதையைச் சொன்னான் வண்டிக்காரன். அவன் கண்களிலிருந்து ஊற்று நீர் போல கண்ணீர் பெருகிற்று.

"அப்பறம், என்ன நடந்தது?"

"அப்பறமா சாமி. மறு நாள் போய் பார்த்தால் சின்னான் இறந்து கிடந்தானுங்க. கருப்பாயி பொன்னி யாத்திலே விளுந்திருப்பான்னு சொல்றாங்க."

பொன்னியாறு கொஞ்ச தூரத்தில் 'சல சல' வென்று போய்க்கொண்டிருந்தது. வண்டிக்காரன் கூறியது உண்மை என்று சொல்வதுபோ லிருந்தது.

"ஏனப்பா கவுண்டர் என்ன பண்ணுரு? பிச்சு என்னவானுன்?" என்று ஆர்வமுடன் வினவினன் ராமு.


"கவுண்டர் அய்யா வேற வூட்டுக்குப் போயிட்டாரு சாமி. பிச்சுவா, சாமி"— கலக்கம் அவன் குரலில் சப்தித்தது.

"எங்க வீடு இதுதானப்பா. நிறுத்து" என்றேன்.

"பிச்சுவைப்பத்திச் சொல்லிட்டேனுங்க. அவன் வண்டி ஓட்டருன்" என்று சில்லறை வாங்கும் போது சொன்னான். அவன் கண்கள் 'மளமள' வென்று நீரைச் சொரிந்தன.

"நீதானு பிச்சு" என்றேம் நானும் ராமுவும் ஏக காலத்தில்.

அது அவன் காதில் விழுந்ததோ என்னமோ தெரியாது. அவன் வண்டியை அதற்குள் ஓட்டிக்கொண்டு போய் விட்டான்.



"கவியரசர் தாகூரும் மஹாத்மா காந்தியும்"




[எஸ். ஸீதாராமன், கோடைக்கானல்]

ஒரு பெரிய அடர்ந்த காட்டில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தைச் சேர்ந்து கணக்கற்ற பக்ஷிகளும் மிருகங்களும் வசித்துவந்தன. மரத்தின் கீழ் நூறு துவாரங்களுள்ள ஒரு வளையில் பலிதன் என்ற பெயருள்ள ஒரு எலி வசித்துவந்தது. மரத்தின் ஒரு கொம்பில் மஹாக்ரூர ஸ்பாவத்தோடு கூடிய, லோமசன், என்ற ஒரு பூனை, அங்குள்ள பக்ஷிகளின் முட்டைகளையும் குஞ்சுகளையும் த்வம்ஸம் பண்ணிக்கொண்டு வஸித்தது. ஒரு நாள் சாயந்திரம் ஒரு வேடன் அந்த மரத்தின் கீழ் ஒரு வலையைக் கட்டி, பக்ஷிகளையும் மிருகங்களையும் பிடிப்பதற்காக மாமிசத்துண்டுகளை அங்கங்கே போட்டுவிட்டு, வலையில் அகப்பட்ட பிராணிகளை மறுநாட்காலையில் கொண்டு போகும் உத்தேசத்துடன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போய் விட்டான். பூனை கெட்டிக்காரப்பூனை தான். இருந்தாலும் கொஞ்சநேரத்தில் வலையில் சிக்கிக்கொண்டு விட்டது.

அதைக் கண்டதும் எலிக்குக் கொண்டாட்டம். தன் ஜன்ம விரோதி ஒழிந்தான் என்று பிறகு தைரியமாக வலையண்டைபோய் மாம்ஸத்துண்டுகளைத் தின்று வயிறு நிறம்பினதும், தன் வலைக்கு வரப் பார்த்தது. ஆனால், அந்த எலியைத் தின்பதற்காக ஒரு கீரி வளையண்டை காத்திருப்பதை அந்த எலி பார்த்து விட்டது. ஆகையால் வளையண்டை போக முடியவில்லை. மரத்தின்மேல் ஏறிவிடலாமா என்று யோசித்தது. ஆனால், தன்னைத் தின்னும் உத்தேசத்துடன் ஒரு ஆந்தை மரக்கிளையில் உட்கார்ந்திருந்ததைக்கண்டது. ஓடுவதற்கு ஒரு திக்கும் இல்லாமல் திண்டாடும் அந்தச் சமயத்தில் புத்திசாலியாகிய பலிதனின் மனத்தில் திடீரென்று வினோதமான உபாயம் ஒன்று தோன்றிற்று.

பலிதன் தைரியமாகப் பூனையண்டைபோய், "லோமசரே, கவனித்திரல்லவா? உம்முடைய அபாயம் பெரும் அபாயம். என் ஸ்திதியும் அநேகமாக அந்த மாதிரிதான். இந்தச் சமயத்தில் நீரும் நானும் ஸ்னேகமாயிருந்தால் இருவருக்கும் நலம். வேடன் வருவதற்குள் வலையைக் கத்தரித்து உம்மைக் காப்பாற்ற என்னால் முடியும். உங்கள் ஆதரவை எனக்குக் கொடுக்க உங்களால் முடியும் இந்த விதமான பரஸ்பர உதவி உங்களுக்கு சம்மதமா சொல்லுங்கள்?" என்று கேட்டது.

"வெகு சம்மதம்" என்று பூனை வெகு ஆவலோடு சொல்லிற்று. எலி பூனையோடு குதூகலத்தோடு ஸம்பாஷணைகளை விஸ்தாரமாக நடத்தினதோடுகூட, பூனையின் மடியிலும், தோளிலும், முதுகின்பேரிலும் ஏறிக் கொஞ்சி விளையாடிற்று. இதைக்கண்ட கீரியும், ஆந்தையும்

அந்த எலியைப் பிடித்துத் தின்னும் ஆசையை மறந்து விட்டன.

எலி வலையையும் கத்தரிக்க ஆரம்பித்தது; ஆனல் அவசரப்படாமல், நிதானமாகக் கத்தரித்தது. இப்படித் தாமதப் படுத்தினது பூனைக்குப் பிடிக்கவில்லை. சீக்கிரமாகக் கத்தரிக்கும்படி எலியைக் கேட்டுக் கொண்டது. அதற்கு எலி, "உம்மைத் தப்புவித்து விடுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். என் வார்த்தையைக் காப்பாற்றப் போகிறேன் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் உம்மை வெளியில் விட வேண்டிய சமயம் எனக்குத் தெரியும். இப்பொழுது விட்டால், நீர் உடனே என்னை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு விடுவீர்." என்று பதில் சொல்லிற்று. தன்னை நம்பாதது பிசகென்று பூனை எவ்வளவோ சொல்லிப்பார்த்தது. ஆனல் எலி அதைக் கவனிக்காமல், கத்தரிக்க வேண்டிய வேலையில் முக்காலே அரைக்கால் வாசி வேலையை சாவகாசமாகச் செய்துவிட்டு, அரைக்கால்வாசி வேலையைப் பாக்கிவைத்துக் கொண்டிருந்தது.

விடிந்தவுடன் வேடன் வந்தான். வேடனைக் கண்டவுடன் பூனை முன்னிலும் அதிகமாக எலியைக் கெஞ்சிற்று. வேடன் நெருங்கி வரும்வரை எலி சும்மா இருந்துவிட்டுக் கிட்ட வந்தவுடன் பாக்கியிருந்த கொஞ்சம் வேலையையும் முடித்து விட்டது. பூனை ஒரே ஓட்டமாக வெளியே வந்து மரத்தின்மேல் ஏறிக்கொண்டது. வேடனைக் கண்டவுடன் கீரியும் ஆந்தையும் ஓடியேபோய் விட்டபடியால் எலியும் தன் வளைக்குள் நுழைந்து கொண்டது. ஆகையால் எலியினுடைய சீக்கிர புத்தியினல் எலி, பூனை இரண்டும் சௌக்கியமாயிருந்தன. வேடன் தொங்கின முகத்தோடு அறுந்துபோன வலையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினன்.

வேடன்போன பிறகு பூனை எலி வளையின் முன்னல்வந்து முந்தின நாள் அவைகள் இரண்டும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஞாபகப் படுத்தி, பரஸ்பர ஸ்னேகபாவத்தைக் காட்டிக் கொள்வதற்காக வெளியே வரும்படி எலியை எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்தது. ஆனல் "ஸ்னேகமும், த்வேஷமும் சௌகரியா சௌகரிய அமைப்பைப் பொறுத்தது. நேற்று உன் உதவி எனக்கு அவசியமாயிருந்தது. என் உதவி உனக்கு அவசியமாயிருந்தது. இப்பொழுது அந்த நிலைமை இல்லை. இப்பொழுது நான் இருக்குமிடமே எனக்குச் சிலாக்கியமான இடம்" என்று எலி ஒரே தீர்மானமாகப் பதில் சொல்லிவிட்டது.

கி. பி. 1939-ம் வருஷத்தில் ஐரோப்பாவில் நடந்த விஷயங்களுக்கு, எத்தனையோ ஆயிர வருஷங்களுக்கு முன் இந்தியாவில் எழுதப்பட்ட ஒரு கதை எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது, பாருங்கள்.